பக்கங்கள் எட்டு
விலை ரூபா: 5.00

# வலம்புரி
VALAMPURI

லாலா சோப்
சன்சயின் சோப்
விநியோகஸ்தர்
குகன்
பல்பொருள் வாணிபம்
பஸ் நிலையம் முன்பாக
யாழ்ப்பாணம்.
லாலாசோப் அச்சுவேலி
(கி.1045)

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை 13 செவ்வாய்க்கிழமை (28-11-2000) தொ. பேசி 3378 ஒலி: 344

★ சமாதான த்திற்கு நாம் எதிரானவர்கள் அல்லர்.
★ விடுதலைக்காக போராடும்உரிமை எமக்குண்டு.

# இயல்புநிலைஉருவாகுமானால்நாம் நிபந்தனை அற்ற பேச்சிற்கு தயார்!

## மாவீரர் தின உரையில் "பிரபா"

(நமது நிருபர்)

சமாதான வழியில் தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கும், அரசியல் தீர்வு காண்பதற்கும் எமது விடுதலை இயக்கம் தயாராக உள்ளது. நாம் சமாதானவழிவகைகளுக்கு எதிரானவர்கள் அல்லர். அதேவேளை நாம் சமாதானப்பேச்சுக்களில் பங்குகொள்ளத் தயங்கவும் இல்லை.

சமாதானப் பேச்சுக்கள் நல்லெண்ண சூழ்நிலையில் இடம் பெற வேண்டுமென்றே நாம் விரும்புகிறோமே தவிர, பேச்சுவார்த்தைகளுக்கு நிபந்தனைகள் விதிக்கவில்லை போர் நெருக்கடிகள் தளர்த்தப்பட்டு இயல்புநிலை தோன்றுவதற்கு இருதரப்பினரும் நம்பிக்கையை வளர்ப்பதற்கு நல்லெண்ண நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என நோர்வே அரசு யோசனைகளைத் தெரிவித்துள்ளது. அதனை நாம் ஆழமாகப் பரிசீலித்து வருகிறோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் 11 வது மாவீரர் தினத்தை முன்னிட்டு புலிகளின் குரல் வானொலியில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

தாடும் சர்வதேசமும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த மாவீரர் தின உரையை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நேற்று மாலை 6.08 மணிக்குபுலிகளின்குரல்வானொலி மூலம் ஆற்றினார்:

சமாதான வழிகளில் எட்டப்படும் தீர்வானது நியாயமான நீதியான சமத்துவம் உடையதாக தமிழரின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடியதாக அமையவேண்டும் என்பதே எமது விருப்பம்.

நோர்வே நாட்டு சமாதான

→ 8ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு மாநகரில் நேற்று சோதனை தீவிரம்

(கொழும்பு)

மாவீரர் தின நிகழ்வுகளை முன்னிட்டு நேற்று கொழும்பு நகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தன.

கொழும்பு நகர வீதிகளில் சோதனைச் சாவடிகள் உட்பட பல இடங்களில் பொலிஸாரும், படையினரும் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

வீதிகளில் செல்லும் வாகனங்கள் யாவும் மறிக்கப்பட்டு கடுமையான சோதனைக்குள்ளாக்கப்பட்டன.

(வ)

## கொழும்புத் துறையில் நேற்று மோதல்

கொழும்புத்துறை, அரியாலைப் பகுதிகளில் நேற்றுக் காலை இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பெரும் மோதல் இடம் பெற்றது.

கடும் மழைக்கு மத்தியிலும் சுமார் ஒரு மணிநேரமாக இடம்பெற்ற உக்கிர சமரில் சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களும், ஷெல் தாக்குதல்களும் கிரனேட் வீச்சுக்களும் இடம் பெற்றன. இச்சத்தங்களினால் யாழ் நகரம் அதிர்ந்தது.

இதேவேளை மாவீரர் நாளான நேற்று இத்தாக்குதல் நடைபெற்றதனால் மக்கள் மத்தியில் அச்சம் நிலவியது. (இ. 59,110)

## 158 கரும்புலிகள் புடைசூழ பிரபாகரன் ஈகைச் சுடரேற்றினார்

(வவுனியா)

கடற்கரும்புலிகள் பலர்வீர காவியம் படைத்த கடற் பகுதியில் மாவீரர்களின் ஈகத்தையும், வீரத்தையும் எடுத்தியம்பும் வகையில் அமைக்கப்பட்ட கரும்புலிகள் நினைவாலயத்தில் நடந்த மாவீரர்தின நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின்தலைவர்வே.பிரபாகரன் கலந்துகொண்டார்.

158 கடல்,தரைகரும்புலிகள் அவரைப் புடைசூழ மாவீரர் தினத்தின்பிரதானநிகழ்வான ஈகைச் சுடரை பிரபாகரன்

## அமெரஜாங்கஅமைச்சின் செயலர் கொழும்பு விஜயம்

(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்க அமைச்சின் செயலாளர் கார்ல் இன்டர்பேர்த் நேற்று காலை கொழும்பு வந்து சேர்ந்துள்ளார்.

கொழும்பு வந்த அவர் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் சந்தித்துள்ளார்.

ராஜாங்க அமைச்சுச்செயலர் கார்ல் இன்டர் பேர்த் இன்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்காவையும், எதிர்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களையும் சந்திக்கவுள்ளார்.

# 158 கரும்புலிகள் புடைசூழ பிரபாகரன் ஈகைச் சுடரேற்றினார்

(வவுனியா)
கடற்கரும்புலிகள் பலர்வீர காவியம் படைத்த கடற் பகுதியில் மாவீரர்களின் ஈகத்தையும், வீரத்தையும் எடுத்தியம்பும் வகையில் அமைக்கப்பட்ட கரும்புலிகள் நினைவாலயத்தில் நடந்த மாவீரர்தின நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்வே.பிரபாகரன் கலந்துகொண்டார். 158 கடல், தரைகரும்புலிகள் அவரைப் புடைசூழ மாவீரர் தினத்தின்பிரதானநிகழ்வான ஈகைச் சுடரை பிரபாகரன் ஏற்றி வைத்தார்

ஈகைச் சுடர் ஏற்றியதைத் தொடர்ந்துஅவர் முதலாவது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப்டினண்ட்சங்கரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். (ம)

# அமெ ராஜாங்க அமைச்சின் செயலர் கொழும்பு விஜயம்

(கொழும்பு)
அமெரிக்க இராஜாங்க அமைச்சின் செயலாளர் கார்ல் இன்டர்பேர்த் நேற்று காலை கொழும்பு வந்து சேர்ந்துள்ளார்.

கொழும்பு வந்த அவர் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைச்சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலானஇராஜாங்கத்தொடர்புகளை வளர்த்துக் கொள்வதற்கான ஒப்பந்தம்ஒன்றிலும் கார்ல் இன்டர் பேர்த்தும், லக்ஷ்மன் கதிர்காமரும் கைச்சாத்திட்டுள்ளனர்.

இராஜாங்க அமைச்சுச்செயலர் கார்ல் இன்டர் பேர்த் இன்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவையும், எதிர்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்துப்பேசவுள்ளார். (வ)

## கொழும்பிலும் புலிகளின் குரல்

புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் மாவீரர் தின உரையை கொழும்பிலுள்ள

→ 8ஆம் பக்கம் பார்க்க

# ஈகைச் சுடரேற்றிய புலிகளின் தளபதிகள்

(வவுனியா)
11வது மாவீரர்தின நிகழ்வுகளை முன்னிட்டு மாவீரர் துயிலும் இல்லங்களில் ஈகைச் சுடரேற்றும் நிகழ்வுகள் இடம் பெற்றன.

வன்னி விளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்ற வைபவத்தில் கிட்டு பீரங்கிப் படையணித் தளபதி கேணல் பானு ஈகைச் சுடரேற்றி வைத்தார்.

மன்னார் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் தளபதி கேணல் ஜெயம்;

முள்ளியவளையில் இடம் பெற்றவைபவத்தில் மூத்த தளபதி பொட்டுஅம்மான்;

கிளிநொச்சியில் இடம் பெற்ற வைபவத்தில் தளபதி கேணல் தீபன்;

முழங்காவிலில் இடம் பெற்ற வைபவத்தில் கடற் புலிகளின் தளபதிகளில் ஒருவரான அருச்சுனன்;

விஸ்வமடுவில் இடம் பெற்ற வைபவத்தில் கேணல் கருணா அம்மான்;

ஆகியோர் ஈகைச்சுடரை ஏற்றிவைத்தனர். (ம)

# வவுகல்வியியல்கல்லூரியில் புலிக்கொடி ஏற்றப்பட்டது

(வவுனியா)
வவுனியாகல்வியியற்கல்லூரியின் கொடிக்கம்பத்தில் மாவீரர் நாளான நேற்று புலிக்கொடி பறக்க விடப்பட்டிருந்தது.

இராணுவக் கட்டுப்பாட்டு உயர் பாதுகாப்பு பகுதியிலுள்ள கல்வியியற் கல்லூரி

→ 8ஆம் பக்கம் பார்க்க

# நிபந்தனையற்ற பேச்சு நடந்தால் அது வரவேற்கத்தக்கதே

## அமைச்சர் டி. எம். ஜயரத்தின

(கொழும்பு)
அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடைபெறுமானால் அது வரவேற்கத்தக்கதொன்றாகும். அதனையே நாம் விரும்புகிறோம். இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம். ஜயரத்தின தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயார் எனத் தெரிவித்துள்ள செய்தி குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; யுத்தம் தணிப்பு, மோதல் தவிர்ப்பு, சமாதானப் பேச்சிற்கு வழி அமைக்கும் என விடுதலைப்புலிகளின் தலைவர் தெரிவித்துள்ள கருத்து நல்ல கருத்து. இதுவிடயத்தில் நாமும், அவர்களும் ஒரே நிலைப்பாட்டிற்கு வரமுடிந்திருப்பதுசந்தோஷப்படவேண்டிய விடயமாகும் என்றும் கூறினார்.

அரசிற்குள் தெளிவற்ற கொள்கை இருப்பதாக விடுதலைப்புலிகளின் தலைவர் தெரிவித்துள்ள குற்றச் சாட்டுக் குறித்துக் கேட்டபோது;

ஸ்ரீ லங்காவில் அரசியல் கட்சிகளுக்குள் எந்த விடயத்திலும் முரண்பாடான கருத்துக்கள் இருப்பது அக் கட்சிகளின் பலவீனமாகும். இருந்தாலும் நாம் ஒரு கொள்கையை வகுத்து அதனை

(8ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### மலிவு விலை

பாடசாலைப் புத்தகங்கள், உபகரணங்கள், அப்பியாசக் கொப்பிகள், இலங்கை, இந்திய எழுத்தாளர்களின் நாவல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் அனைத்தும் மலிவாக எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். இன்றே விஜயம் செய்யுங்கள். ஸ்ரீ சக்தி புத்தகசாலை சிவகாம சுந்தரி அம்மன் ஆலயத்துக்கு அருகாமை ஆடிய பாதம் வீதி திருநெல்வேலி. (கி-1056)

### சீமெந்துக் கூரை ஓடுகள்
(LM(RS)
LOGES SHEET INDUSTRIES
INUVIL.

ஜீ. ரி. சற். அரசசார் பற்ற நிறுவனங்களால் புனரமைப்பு செய்யப்படும் வீட்டுத் திட்டங்கள், பாடசாலை கட்டடங்கள் போன்றவற்றிற்கு பயன்படும் சீமெந்துக் கூரை ஓடுகள், முகட்டோடுகள் விற்பனைக்குண்டு.

இயந்திரம் மூலம் தயாரிக்கப்படும் கொங்கிறீற் கற்களும் விற்பனைக்குண்டு. தொழிற்சாலையும், விற்பனை நிலையமும்: லோகேஸ் கூரை ஓட்டுத் தொழிற்சாலை இணுவில். (1871)


## தொழில் நுட்பக் கல்லூரிகளில்
# இடர்கால கொடுப்பனவின்றி
# வருகை விரிவுரையாளர் அவலம்

(மட்டக்களப்பு)

தொழிற் பயிற்சி கிராமிய அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் தொழில் நுட்பக் கல்லூரிகளில் கடமை புரியும் வருகை விரிவுரையாளர்களுக்கு 1997 ஆம் ஆண்டு முழுவதுக்குமான, 1999 ஆம் ஆண்டில் ஆறு மாதங்களுக்கானதுமான இடர்காலக் கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை, என வருகை விரிவுரையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, சம்மாந்துறை, பொலநறுவை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளில் பணி புரிவோரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக அமைச்சு உட்பட பலரிடம் சுட்டிக் காட்டியும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளனர். (ச-60)

## அதிபர் கூட்டம்

(துன்னாலை)

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை பி.ப 1 30 மணிக்கு நெல்லியடியில் அமைந்துள்ள காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் அதிபர்கள் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருந்து பாடசாலைக்குச் சமுகமளிக்கும்மாணவர்களின் விபரங்களையும் சமர்ப்பிக்குமாறு இவ் வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா கேட்டுள்ளார். (ச-41)

## உண்ணாவிரதமிருந்த
# பல்கலை மாணவர்
# தாக்கப்பட்டார்

(கொழும்பு)

உண்ணாவிரதமிருந்த பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவன் இனம் தெரியாத குழுவினரால் கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்டார்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது;

பேராதனைப்பல்கலைக் கழக விரிவுரையாளர் ஒருவர் தாக்கப்பட்டமை தொடர்பாக சம்பந்தப்பட்ட மாணவர்கள் எனக்கருதியோர் மீது பல்கலைக் கழக நிர்வாகம் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொண்டது.

இதனைஎதிர்த்து பல்கலைக் கழக கலைப்பீட மாணவர்கள் சுழற்சி முறையிலான உண்ணாவிரதத்தினை மேற்கொண்டு வந்தனர்.

கடந்த திங்களன்று உண்ணாவிரதத்தில்ஈடுபட்டிருந்த மாணவர் ஒருவரை வாகனத்தில் வந்த இனம் தெரியாத குழுவினர் கடத்திச் சென்று கடுமையாகத் தாக்கிவிட்டு கண்ணைக் கட்டிய நிலையில் வேறோர் இடத்தில் விட்டுச் சென்றுள்ளனர். (உ)

## இடம்பெயர்ந்த ஆயிரம்
# முன்பள்ளி மாணவர்கள்
# வடமராட்சியில் உள்ளனர்

(மந்திகை)

அண்மைக்காலயுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து வடமராட்சி கல்வி வலயப் பகுதிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட முன் பள்ளி மாணவர்கள் தங்கியிருப்பதாக வலய முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் துரை சத்திய சீலன் தெரிவித்துள்ளார்.

பச்சிலைப் பள்ளி, பளை, சாவகச்சேரி, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம் பெயர்ந்து சுமார் ஆயிரத்து 128 முன் பள்ளி மாணவர்கள் தங்கியுள்ளனர்.

கரவெட்டியில் 677 பேரும், மருதங்கேணியில் 451 பேரும் தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மாணவர்கள் கல்வி கற்பதற்கு வசதியாக கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய பிரதேசசெயலர் பிரிவில் 12 முன் பள்ளிகள் இயங்குவதாகவும் மேலும் நான்கு முன் பள்ளிகளைஇயக்குவதற்கானநடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-23)

## இந்துமகளிர் கல்லூரியில்
# வணிக வனிதை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துமகளிர்கல்லூரியின் வர்த்தக மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்படும் வணிகவனிதை சஞ்சிகையின் வெளியீட்டு விழா இன்று காலை 9.30 மணிக்கு இடம் பெறும்.

மேற்படி ஒன்றியத்தின் தலைவிசெல்வி கமலலோஜினி சுப்பிரமணியம் தலைமையில் கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறும் இந் நிகழ்வில் ஆசியுரையை கல்லூரி அதிபர் திருமதி எஸ். ஜெயராஜாவும், வரவேற்பு உரையை செல்வி பிரசாந்தி இரட்ணவேலும் வழங்குவர். யாழ். பல்கலைக் கழக முகாமைத்துவத் துறை தலைவர் திருமதி என். தர்மசீலன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

சஞ்சிகையின் வெளியீட்டுரையைமுகாமைத்துவத்துறை விரிவுரையாளர் திருமதி ரி. ரவீந்திரனும் ஆய்வுரையை விரிவுரையாளர் திருமதி ஆர். யோகேந்திரராஜாவும் நிகழ்த்துவர்.

இதழாசிரியர் செல்வி அபிராமி சிவசுப்பிரமணியம், பொறுப்பாசிரியர் திருமதி த. ச. யோகேஸ்வரன் ஆகியோரின்உரையைதொடர்ந்து நன்றியுரையை செல்வி கமலவாசகி பாலசுப்பிரமணியம் நிகழ்த்துவார். (ந)

## மட்டக்களப்பில் வழமை
# நிலை ஸ்தம்பிதம்

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அனுஷ்டித்த மாவீரர் வாரத்தின் இறுதி நாளான நேற்று மட்டக்களப்பில் வழமையான செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்தன.

புலிகள் தாக்குதல்களை மேற்கொள்ளக் கூடும் என்ற அச்சத்தினால் பொது மக்கள் வரவு குறைவாகக் காணப்பட்டதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

இதேவேளைநேற்றுமட்டக்களப்புநகரம், காத்தான்குடி உட்பட பல இடங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் உசார் நிலையில் இருந்ததோடு பொலிசார் விஷேட ரோந்து நடவடிக்கையிலும் டுபட்டிருந்தனர். (ச-60)

## மன்னார்மீனவர்பிரச்சினை
# டக்ளஸ் தலைமையில் மாநாடு

மன்னார் மாவட்டத்திலுள்ள மீனவர்கள் எதிர் நோக்கிவரும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணுமுகமாக விசேட உயர்மட்ட மகாநாடு ஒன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் தலைமையில் விரைவில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இவ்வுயர்மட்ட மகாநாட்டில் மீன்பிடித்துறை அமைச்சர், இராணுவம் மற்றும் கடற்படையின் உயர் அதிகாரிகள், மன்னார் மாவட்ட அரச அதிபர், மீன்பிடித்திணைக்கள அதிகாரிகள், மன்னார் மாவட்டத்திலுள்ள மீனவர் சமாசம் மற்றும் மீனவர் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்படும் கடல் எல்லை, கடலில் இறங்க அனுமதிக்கப்படும் நேரம், இயந்திர வள்ளங்களைப் பயன்படுத்த அனுமதி, மீனவர்களுக்கு நிவாரணம், கடந்தகால யுத்தநடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உரிய நஷ்டஈடு வழங்கல் போன்ற விடயங்களுடன் பேசாலையில் ஐஸ் தொழிற்சாலைகளை மற்றும் தகரத்தில் மீன் அடைத்தல் தொழிற்சாலைகளை மீள நிறுவுதல், கடல் அரிப்பைக் கட்டுப்படுத்துதல், ஆசிய அபிவிருத்தி வங்கியின்மூலம் மீனவர்களுக்குக் கடன்வழங்கல் ஆகிய விடயங்களும்இம்மகாநாட்டில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

க.பொ.த (சா/த)
# முன்னோடி கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொது சாதாரண தர மாணவர்களின் பொதுப் பரீட்சைக்கான கல்வி மேம்பாட்டுச் செயற்திட்டக் கருத்


யாழ்ப்பாணத்திலிருந்து யாழ்ப்பாணப்
பொருட்களை கொழும்பிற்கு
'லங்கா முடித' கப்பலில்
அனுப்புவோரது கவனத்திற்கு

## அனுப்புவோரது கவனத்திற்கு

டிசம்பர் மாத முதற்கிழமை அளவில் யாழ்ப்பாணத்திலிருந்து ''லங்கா முடித'' கப்பல் கொழும்பிற்குச் செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இக்கப்பலில் பொருட்களைக் கொண்டு செல்ல விரும்புபவர்கள் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

→ இங்கிருந்து அனுப்பும் பொருட்களின் பெயர், அதன் அளவு போன்ற விபரங்களையும், அத்துடன் பொருட்களைப் பொறுப்பேற்க அமர்த்தியுள்ள முகவரின் விபரங்களையும் செயலக புனர்வாழ்வுப் பகுதியில் சமர்ப்பிக்க வேண்டும்.

→ உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பழுதடையக் கூடிய பொருட்களிற்குக் கப்பல்கட்டணம் இல்லை. எனினும் பருத்தித்துறை, துறைமுகத்தில் பொருட்களை ஏற்றி இறக்குவதற்குரிய கையாளற் கட்டணங்களைச் செலுத்த வேண்டும். அத்துடன் கொழும்புத் துறைமுக இறக்கற்கட்டணம் ஒரு மெ. தொன்னிற்கு 4$ வீதமும் பொருட்கள் ஏற்றும்போதே செலுத்தப்பட வேண்டும்.

→ பழுதடையாத உற்பத்திப் பொருட்களிற்கு ஒரு CBM/MT இற்கு 25% கப்பல் கட்டணமும் அத்துடன் பொருட்களை பருத்தித்துறை, துறைமுகத்தில் ஏற்றி இறக்குவதற்குரிய கையாளற் கட்டணங்களையும் செலுத்த வேண்டும். அத்துடன் கொழும்பு துறைமுக இறக்கற்கட்டணம் ஒரு மெ.தொன்னிற்கு 4$ வீதமும் பொருட்கள் ஏற்றும்போதே செலுத்தப்பட வேண்டும்.

எனவே பொருட்களை ஏற்ற விரும்புபவர்கள் பொருட்களின் விபரம், சரியான அளவையும் குறிப்பிட்டு யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அரசாங்க அதிபர்
யாழ்ப்பாணம்.

(கி-1063)

தர மாணவர்களின் ... பரீட்சைக்கான கல்வி மேம்பாட்டுச் செயற்திட்டக் கருத்தரங்குத் தொடர் வலய ரீதியாக நாளை ஆரம்பமாகவுள்ளது.

சர்வதேச லயன்ஸ் கழகப் பிராந்தியம் ஒன்பதின் தலைவர் வைத்திய கலாநிதி வை. தியாகராசா அவர்களின் செயற்றிட்டத்திற்கு அமைய யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு கல்வி வலயங்களின் கீழுள்ள 13 நிலையங்களில் நவம்பர் 29, 30 மற்றும் டிசம்பர் 01, 02 ஆம் திகதிகளில் விரிவுரைகள் இடம் பெறவுள்ளன.

இக்கருத்தரங்கில் மாணவர்களுக்கான பாடக் குறிப்புக்களும் வினாத்தாள்களும் இலவசமாக வழங்கப்படவுள்ளதோடு, மாணவரின் ஒழுக்கமும் அவதானிக்கப்படும்.

(ச-02)


**ஸ்ரீசெல்வா**

(யாழ்ப்பாணம்)

கார்த்திக்
தேவயானி
ரம்பா
நடிப்பில்
நிலவே முகம் காட்டு
நேரடி CD
10.30—2-30(ப.நேரம்)
[கி-688


...வுள்ளார்கள். ... மீனவர்கள் மீன்பிடிக்க ... ளது.

## பிரிவுத்துயர் பகிர்வு

### திருமதி பத்மாதேவி பாலச்சந்திரன்

அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட பத்மாதேவி பாலச்சந்திரன் 25 ஆம் திகதி வவுனியாவில் காலமானார்.

இறுதிக் கிரியைகள் வவுனியாவில் நடைபெறும்.

தகவல் : நா. விமலாதேவி (சகோதரி)

### இராமப்பிள்ளை விஜயரெத்தினம்

நயினாதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமப்பிள்ளை விஜயரெத்தினம் 26. 11. 2000 அன்று சிவபதமடைந்தார்.

இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றன.

தகவல் : வீ. ஓங்காரலிங்கம் (மருமகன்)

### திருமதி யோகம்மா காங்கேயன்

உரும்பிராய் தெற்கைச் சொந்த இடமாகக் கொண்ட யோகம்மா காங்கேயன் 26.11.2000 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் நேற்று நடைபெற்றன.

தகவல் : குடும்பத்தினர்.

## தமிழர்கள் இந்த நாட்டில் இம்சைப்படுத்தப்படுவதான உணர்வு இருக்கும்வரை

# விடுதலைப் புலிகள் அமைப்பும் நிலைக்கும்

### பிரபல அரசியல் விமர்சகர் 'சிவராம்' தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர்கள் இந் நாட்டில் இம்சைக்குள்ளாகிறார்கள் என்ற நிலை தொடரும்வரை விடுதலைப் புலிகள் அமைப்பும் நிலைக்கும் என்பதே உண்மையாகும்.

மேற்கண்டவாறு கொழும்பு 'டெய்லி மிரர்' பத்திரிகையில் பிரபல அரசியல் விமர்சகர் சிவராம் (தராக்கி) தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; இந்தியா, பாகிஸ்தான், அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரிட்டன், செக் குடியரசு, சுவீடன், தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு தனது பிரச்சாரத்திற்கு பயன்படுத்துகிறது.

இதுவிடயத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு தார்மீக ஆதரவை வழங்காத நாடுகள் இல்லை எனலாம்.

இத்தகைய நாடுகளைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேடைக்கு அழைத்து வருவதில் மட்டும் கொழும்பு அரசாங்கம் முனையவில்லை.

மாறாக விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு நிதிதிரட்டுதலை தடை செய்தல், விடுதலைப் புலிகள் எனச்சந்தேகிக்கப்படுவோரை கைதுசெய்தல், இயக்கத்தை தடைசெய்யும் வகையில் அழுத்தம் பிரயோகித்தல் போன்ற செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகிறது.

இத்தகைய செயற்பாடுகளால் சம்பந்தப்பட்ட அமைப்பின் செயற்பாடுகளை ஸ்தம்பிதமடையச் செய்யலாம் என்றோ அல்லது முற்றாக நிறுத்தலாம் என கொழும்பு அரசாங்கம் நினைத்தால் அது முற்றிலும் தவறான ஒன்றாகவே அமையும்.

கனடாவில் விடுதலைப் புலிகள் ஆதரவாளர் எனக்கருதப்படும் சுரேஷ் மாணிக்கவாசகத்தை நாடுகடத்திய தன் மூலம் விடுதலைப் புலிகளின் நடவடிக்கையை ஒடுக்கமுடிந்ததா என்றும் வினா எழுப்பியுள்ளார்.

தனது உள்நாட்டுக்கிளர்ச்சிளை அடக்கும் முயற்சியில் இலங்கை அரசாங்கம் பல அந்நிய நாடுகளை பயன்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

# ஆலயவழிபாடு, சமயசடங்குகளில் மனிதன் நம்பிக்கை இழக்க நேரிடும்

### சுவாமி சித்ரூபானந்தா தெரிவிப்பு

(தென்மராட்சி)

இந்த நாட்டில் சமய வாழ்க்கை 2000 ஆண்டில் இருந்து மிகவும் வித்தியாசமான திருப்பத்தை எடுக்கும். ஆலயவழிபாடு, சமயச்சடங்குகளில் மனிதன் தன்நம்பிக்கையை இழக்கநேரிடும். விஞ்ஞான வளர்ச்சி மனிதனை மனிதநேயம் படைத்தவனாகவே பார்க்க விரும்புகிறது. புராணக் கதைகளைப் பேசி வந்தால் வருங்காலத்தில் இதனை எதிர்காலச் சந்ததியினர் எள்ளி நகையாடுவார்கள்.

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ணா சாரதா சேவர்ச்சிரமத்தின் முதல்வர் சுவாமி சித்ரூபானந்தா கரவெட்டியில் தற்போது இயங்கி வரும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் க.பொ.த, உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு நடத்தப்பட்ட கருத்தரங்கில் உரையாற்றிய போது குறிப்பிட்டார்.

மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எஸ். சிவநாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் 'வருங்காலத்தில் சமயம்- சமயத்தின் வருங்காலம்' எனும் பொருளில் சுவாமி சித்ரூபானந்தா தொடர்ந்து கருத்துரையாற்றும்போது;

மேலை நாடுகளில் கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு மக்கள் போவது அருகிவருகிறது சில கிறிஸ்தவ சமூகத்தினர் சமூக சேவையில் ஈடுபட்டு மக்களைக் கவர்கின்றனர். இதைச் சமயம் என்றபோர்வையில் செய்கின்றார்கள். இதுவும் சமயத்தின் நோக்கமல்ல. சமய வாழ்வு மூலம் மக்கள் உயர் நிலை அடைய வேண்டும். சகோதர மனப்பான்மையுடன் வாழவேண்டும். சமயம் ஒரு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கக்கூடாது. சில ஞானிகளின் வாழ்க்கையில் ஈர்க்கப்பட்டு பல ஆயிரம் மக்கள் தங்கள் நடை உடைபாவனைகளை மாற்றி மனித நேயம் படைத்தவர்களாக இல்லாததைக் காண்கின்றோம்.

சுவாமி விவேகானந்தர் ஒரு இடத்தில் ஒரு தேவாலயத்தில் பிறப்பு நல்லது, ஆனால் அந்தத் தேவாலயத்தில் இறந்து விடக்கூடாது என்றார். இதன் விரிவான விளக்கம் யாதெனில்–மனிதன் தன் நற்குணங்களை விரிவுபடுத்தாவிட்டால் வெறும் ஆலய வழிபாட்டால் ஒன்றும் ஆகப் போவதில்லை.

வருங்காலத்தில் எல்லா மதங்களிலும் உள்ள சீரிய பண்புகளை மக்கள் விரும்புவார்கள். இதனையே பின்பற்றுவார்கள். மதத்தின் பெயரால் வெறிபிடித்துத் திரிந்தால் அவர்களை உலகம் வெறுத்து ஒதுக்கி விடும். ஒரு மதம் தான் உயர்ந்தது, மற்றது எல்லாம் வெறும் போலி என்ற வாதம் இனிவருங்காலத்தில் எடுபடவாய்ப்பில்லை.

மக்கள் அமைதியையும் சாந்தியையும் தான் பெரிதும் விரும்புவார்கள். வெளிச் சம்பிரதாயங்களை வெறுத்து ஒதுக்குவார்கள். கல்வி அறிவு விரிவடைந்து வருங்காலத்தில் மக்களை சமயத்தின் பெயரால் ஏமாற்ற முடியாது.

சுவாமி விவேகானந்தர் வெளிநாடுகளில் வெற்றிக் கொடி நாட்டியதன்காரணம் அவரிடம் காணப்பட்ட பரந்த கொள்கையும் மனமுமே. வருங்காலத்தில் சமயத்தின் அடிப்படை மாறாது. ஆனால் விஞ்ஞான ரீதியாகவும் ஆக்கபூர்வமாகவும் இளையசமுதாயத்தினர் எதிர்நோக்கும் காலம் அண்மித்து விட்டது என்றார். (க-77)

# இடம்பெயர்ந்தோர் உணவின்றி பரிதவிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் தங்கியுள்ள மக்களுக்கு இது வரை எவ்வித அடிப்படை வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கவில்லைஎனத் தெரிவித்துள்ளனர்.

சித்தாண்டி மகாவித்தியாலயத்தில் தங்கியிருக்கும் சுமார் 2000 குடும்பங்கள் உணவு, உடை மற்றும் மருத்துவ வசதியின்றித் தங்கியுள்ளனர்.

மேலும் இங்கு தங்கியுள்ள 25 சிறுவர்களுக்கு வாந்திபேதிஏற்பட்டுள்ளது. மற்றும் பலர் காய்ச்சல், தொற்று நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளதாக, நிலைமைகளை நேரில் சென்று பார்வையிட்ட எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார், (ச-60)

# பாவனைக்கு உதவாத வீதி

பருத்தித்துறை செல்லும் பிரதான வீதியில், கலிகைச் சந்தியில் இருந்து மந்திகை வரையான பகுதி பாவனைக்குதவாத வகையில் இருப்பதாக வீதிப் பாவனையாளர்கள் புகார் தெரிவித்துள்ளனர். (உ-39)

## இராசி பலன்

28-11-2000
(கார்த்திகை 13, செவ்வாய்)
துதியை மு ப 7.33 வரை
மூலம் மு.இ 9.52 வரை
ராகுகாலம் 3.13- 4.43
சுபநேரம் 10. 43-12.13
அமிர்த சித்தம்

**மேடம்**
மனதில் அச்சமான நிலை தோன்றல். வயிற்றுக் கோளாறு, சென்ற இடத்தில் செல்வாக்கு, அதிகாரிகள் வெறுப்பு.

**இடபம்**
எதிர்பாராத பிரச்சினை, உறவினர் மனஸ்தாபம், பிரயாண பயம், முயற்சி தாமதம்.

**மிதுனம்**
பிரயாணம், போசனசுகம், வாகன வசதி, காரிய அனுகூலம்.

**கடகம்**
நோய் குணமடைதல், சத்துரு ஜெயம், தனவரவு, முயற்சி கைகூடும்.

**சிங்கம்**
காரிய இடையூறு, மனக் கிலேசம், சிறுவியாதி, புத்திரரால் கவலை.

**கன்னி**
காரியம் கைகூடும், தன்னம்பிக்கைக் குறைவு, கல்வியின் சிறப்பு, நிலைக்கேடு.

**துலாம்**
முயற்சி கைகூடும், இனிய நிகழ்வு, பிரயாணம், தனவரவு.

**விருச்சிகம்**
வாக்குக் கலகம், பணவிரயம், கௌரவக் குறைவு, முயற்சி தாமதம்.

**தனுசு**
புதிய பொருள் சேர்க்கை, சயன சுகம், உடல் நலம், காரியம் கைகூடும்.

**மகரம்**
கோபப்படுதல், அலைச்சல், பணச் செலவு, பிரயாணம்.

**கும்பம்**
தனவரவு, கீர்த்தி, நண்பர்கள் சந்திப்பு, குடும்ப சுகம்.

**மீனம்**
முயற்சி கைகூடும், செய் தொழில் விருத்தி, நிலை மாற்றம், சிறுவியாதி.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

### யாழ். மாவட்ட அபிவிருத்திக்கென

# ஒதுக்கப்பட்ட பணமானது சமமாக பங்கிடப்பட்டதா?

### வல்லை நகரசபைதலைவர்கேள்வி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடா நாட்டில் புனரமைப்புப் பணிகளுக்கு என வடமாகாணமீளக்குடியமர்வு புனர்வாழ்வு அதிகார சபையினால் ஒதுக்கப்பட்ட நிதி யாழ். குடாநாட்டின் சகல பகுதிகளுக்கும் சமமாக பங்கிடப்பட்டனவா என வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ். செயலகத்தில் அண்மையில்இடம் பெற்ற கூட்டத்தின் போது கல்வித்திணைக்கள அதிகாரிகள் தமதுசெயற்பாடுகள் பற்றி விளக்கும் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

யாழ். குடாநாட்டில் இன்னும் எத்தனையோ பாடசாலைகளில் கதிரை வாங்கு மேசையின்றியும் கட்டட வசதியின்றியும் இருக்க யாழ். நகரில் உள்ள பிரபல்ய பாடசாலைகளுக்கு மாடிக் கட்டடங்கள் அமைக்க பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

முதலில் பாதிக்கப்பட்ட சகல பாடசாலைகளின் தேவைகளை நிறைவுசெய்துவிட்டு பின்னர் வேறு பாடசாலைகளுக்கான மேலதிக வேலைப்பாடுகளுக்கு பணம் ஒதுக்கினால் எமக்கு ஆட்சேபனை இல்லைஎன்று அவர் தெரிவித்தார்.

இதேபோன்றுயாழ் வீரசிங்கம் மண்டபம் பல இலட்சம் ரூபாவில் திருத்தப்பட்டும் இன்று அதன்பயன்பாடுகுறைவாக உள்ளதாகவும் தெரிவித்தார் இந் நிதியை வேறு திட்டங்களுக்கு ஒதுக்கி மக்களின் தொழில் வாய்ப்பிற்கு பயன்படுத்தியிருக்கலாம்.

அபிவிருத்தியானது சகல இடங்களிலும் மேற்கொள்ளப்படவேண்டுமே ஒழியஒரே இடத்தில் நிதிகளை குவிக்கக் கூடாதுஎன்றும் அவர் மேலும் கூறினார். (க-12)

# சஞ்சிகை வெளியீடு

(கந்தர்மடம்)

யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் மாணவர் ஒன்றியத்தினால் எதிர்வரும் புதன்கிழமை முதலாவது சஞ்சிகை வெளியிடப்படவுள்ளது.

இந் நிகழ்வு மேற்படி நிறுவன கேட்போர் கூடத்தில் காலை 10 மணிக்கு இடம் பெறும். (க-37)

# பொதுச் சேவைக்காக தன்னை அர்ப்பணித்தவர் மயில்வாகனம்

### சாவகச்சேரி நகரசபை தலைவர்தெரிவிப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரத்தின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் அர்ப்பணிப்புடன் நிறைந்த சேவைகள் பல செய்த முன்னாள் தலைவர் எஸ். கே. மயில்வாகனம் பொதுச் சேவைக்கென்றே தன்னை முழுநேரமும் ஈடுபடுத்திக்கொண்டவர். மிக விசேடமாக சமுதாயத்தின் அடிமட்ட மக்களின் துன்பங்களையும் துயரங்களையும் போக்கி அவர்களது வாழ்வில் ஒளியேற்றும் பணிகளைச் செய்த ஒரு பெருமகன்.

இவ்வாறு சாவகச்சேரி நகரசபையின் தலைவரான பெ. தனபாலசிங்கம் சபையின் முன்னாள் தலைவராக கடமையாற்றி அண்மையில் கொழும்பில் காலமான எஸ். கே. மயில்வாகனத்தின் மரணம் தொடர்பாக விடுத்த அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது அனுதாபச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

அமரர் மயில்வாகனம் சபையின் தலைவராக இருந்தசமயம், அறைக்குள் முடங்கிக் கிடக்காது சபையின் செயல்பாடுகள் திட்டங்களில் நேரடியாகவே பங்குகொண்டு, தொழிலாளர்களுடன் மிகவும் அந்நியோன்னியத்துடன் பழகியவர். அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு சாவகச்சேரி நகரசபை தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-77)

# செய்தித் துளிகள்

## ஏழாலையில் திருட்டு

(ஈச்சமோட்டை)

ஏழாலைப் பகுதியில் கடந்த சிலகாலமாக திருட்டுநடவடிக்கைகள் அதிகரித்து வருவதனால் மக்கள் மத்தியில் அச்சம் நிலவுகின்றது.

இரவு வேளையில் வீட்டினுள் நுழையும் திருடர் ஆடு, மாடு, கோழிகளை மட்டுமல்லாது வீட்டுவாயில் ''கேற்'' களைக் கூட திருடிச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் தோட்டப்பகுதிகளில் திருடும் மரக்கறி வகைகளைச் சந்தைகளில் விற்று வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ - 59)

## வருடாந்த சம்மேளன கூட்டம்

(ஏறாவூர்)

ஐக்கிய தேசியக் கட்சியின் 46 வது வருடாந்த சம்மேளனக் கூட்டம் அடுத்த மாதம் 3 ம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கான அழைப்புகள் சகலமாவட்ட ஐக்கியதேசியக் கட்சி உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (வ)

## வாகனச் சாரதிகள் கவலை

(கல்வயல்)

கொடிகாமம் வீதியும் பருத்தித்துறைவீதியும் இணையும் நெல்லியடி பஸ் நிலையம் முன்பாக உள்ள பகுதி, மிகவும் ஆபத்து மிகுந்ததாகக் காணப்படுவதாக வாகனச் சாரதிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேற்படி இரு வீதிகளும் இணையும் இடத்திற்கு மிக அருகாக புதிய கடைக்கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு, அதனைப் பாதுகாக்கும் நோக்கில் வேகத்தடுப்பாக உடைந்த மின்சாரக் கம்பம் போடப்பட்டுள்ளமையே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. [உ-111)

## விபரம் சேகரிப்பு

(துன்னாலை)

கரவெட்டி நெல்லியடி வணிகர்சங்க எல்லைக்குட்பட்ட வியாபார நிலையங்கள் மற்றும் தொலைத்தொடர்பு நிலையங்கள் என்பவற்றில் பணிபுரியும் ஊழியர்களின் விபரங்களை உடன் சமர்ப்பிக்குமாறு நெல்லியடி சிவில் நிர்வாக காரியாலயம் கேரியுள்ளது. (உ-41)

## உப அஞ்சல் அதிபர்கள் கவலை

(துன்னாலை)

போர்ச்சூழல் காரணமாக தென்மராட்சிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சியில் தனியார் வீடுகளில் செயற்பட்டுவரும் உப அஞ்சல் அலுவலகங்கள் பெரும் சிரமத்திற்கு மத்தியில் இயங்க வேண்டியுள்ளது.

போதியளவு இடவசதி தளபாடவசதிகள் இல்லாது இருக்கின்றதாகவும் சொத்துக்களை பாதுகாப்பதில் பெரும் சிரமங்கள் ஏற்படுவதாகவும் உப அஞ்சல் அதிபர்கள் தெரிவித்துள்ளனர். (உ-4)

## வீதி திருத்தம்

(கல்வயல்)

மானிப்பாய் முதலியார் சனசபை வீதி திருத்தம் செய்யப்பட்டு பாவனைக்கு உகந்ததாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. (உ-111)

## வீதியோரங்களில் முட்புதர்கள்

(கல்வயல்)

வீதியோரங்களில் வளர்ந்து நிற்கும் முட்புதர்கள் மற்றும் செடிகொடிகள் பாதசாரிகளுக்கும், வாகனம் செலுத்துவோருக்கும் மிகுந்த இடைஞ்சலை ஏற்படுத்தி வருகிறது.

வாகனங்கள், வாகனங்களுக்கு வழிவிடும்போதும் பாதசாரிகள் மற்றும் சைக்கிளில் செல்வோர்க்கு வழிவிடும்போதும் பாதையோர முட்புதர்களுக்குள் அகப்பட்டு இன்னலுறும் நிலை காணப்படுகிறது.

முன்னைய காலங்களில் நெடுஞ்சாலைகள் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் என்பன இவ் வீதித்துப்பரவுப் பணியினைச் செவ்வனே நிறைவேற்றி வந்த போதிலும், தற்போது ஏன் இந்த அசமந்தம் என பாதிக்கப்படுவோர் கேள்வியெழுப்புகின்றனர்.

கல்வியங்காடு முதல் வல்லை வரையான வீதியிலேயே மேற்படி இடர்ப்பாடு அதிகம் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (உ-111)

## இணைப்புச் செயலாளர் நியமனம்

(கொழும்பு)

பௌத்த சாசன அமைச்சின் இணைப்புச் செயலாளராக விதுரவிக்கிரமநாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமர் ரட்ணஸ்ரீ விக்கிரமநாயக்காவின் மகனான இவர், தந்தையாலேயே இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்பதுஇங்கு குறிப்பிடத்தக்கதாகும். (இ)

## சுற்றி வளைப்பு

(வடமராட்சி கிழக்கு)

அச்சுவேலி, ஆவரங்கால் பகுதி நேற்றுக் காலை படையினரால் சுற்றி வளைப்பிற்குள்ளாக்கப்பட்டது.

காலை 7.00 மணி முதல் முற்பகல் 11.00 மணி வரை இடம்பெற்ற இச்சுற்றி வளைப்பில் பெருமளவு படையினர் ஈடுபட்டனர்.

சந்தேகத்திற்கிடமானோர் அச்சுவேலிவைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர். (க-43-57)

## வீதி சீரில்லை

[கல்வயல்]

கொக்குவில் மேற்குப்பகுதியில் நீதிராசா வீதியிலிருந்து பிரிந்து செல்லும் காந்திஜி சனசமூக நிலைய வீதி சேறும் சகதியுமாகக் காணப்படுகிறது.

நீண்ட காலமாகவே செப்பனிடப்படாத மண் வீதியாக உள்ளமையால் மக்கள் போக்குவரத்தில் பெருஞ் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

எனவே இவ் வீதியினை உரியவர்கள் செப்பனிட்டு உதவும்படி அப்பகுதி நலன் விரும்பிகள் கோருகின்றனர். (ச 111)

## மாணவர்க்கு தீட்சை வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வடமாநில இந்துமா மன்றத்தினரால் அண்மையில் கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் வைத்து 176 மாணவர்களுக்கு சைவ சமய தீட்சை வழங்கப்பட்டது.

சிவத்திரு ஆறுமுகம் குருக்கள் இத் தீட்சையினை வழங்கினர். (உ)

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதர மாதிரிப் பரீட்சை - 2000

## கணிதம் பகுதி - 1

நேரம் : 1 மணி

யாழ்- சி.டி. பல்குணன்லாலா


(யா/மல்லாகம் ம.வி.)

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

(நேற்றைய தொடர்ச்சி)

20) ஒரு டசின் கொப்பி ரூ x விலையும் ஒரு சோடி பென்சில் ரூ y விலையும் உடையன எனின் ஒரு சோடி கொப்பிகளினதும், ஒரு டசின் பென்சில்களினதும் மொத்த விலை யாது?

21) $y = (x+6)(x-2)$ என்ற சார்பின் வரைபின்
அ) சமச்சீரச்சின் சமன்பாட்டைத் தருக.
ஆ) திரும்பற் புள்ளி எது?



22) O வினை மையமாகவுடைய வட்டத்திற்கு ABC, CDE என்பன தொடலிகள். B, D என்பன தொடுபுள்ளிகள்


$\hat{OBD} = 40$ பாகை எனின்

1) $\hat{BCD}$ 2) $\hat{BFD}$

என்பவற்றின் அளவுகளைக் கணிக்க.

23) A என்பவன் B என்பவனை 230 பாகை திசைகோளில் காண்கிறான். எனின் B என்பவன் A என்பவனை என்ன திசைகோளில் காண்பான்?

24) $x : y = m : n$ எனின் $x + y : y = m + n : n$ எனக் காட்டுக.



25) [illegible]X = 5 cm, BX = 7 cm, Ay = 4 cm
yc = 11 cm, xy = 6 cm எனின்
BC இன் அளவைக் கணிக்க.

26) 18% பங்குலாபம் தரும் ரூ 20 பங்குகளை வைத்திருக்கும் ஒருவன் வருட வருமானமாக ரூபா 3600 ஐப்பெறுகிறான். அவன் வைத்திருக்கும் பங்குகள் எத்தனை?

27) $\frac{3}{4}$, 0.65, 0.7, $\frac{3}{5}$ என்பவற்றை ஏறுநிரையில் எழுதுக.

28) $\hat{A} = x + 20$ பாகை, $\hat{B} = x - 50$ பாகை ஆகவிருக்க இவை நிரப்பு கோணங்களாயின்
1) x இல் ஒரு சமன்பாடு எழுதுக.
2) $\hat{A}$ இன் அளவைக் கணிக்க.

29) △ ABC இல் $\hat{A} = 90$ பாகை எனின்
1) பக்கங்கள் AB, BC, CA என்பவற்றிற்கிடையிலுள்ள தொடர்பினை சமன்பாடாகத் தருக.
2) BC = 25 cm, AB = 24 cm எனின் AC இன் நீளத்தைக்கணிக்க.

30) A, B ஆகியோர் 3: 4 என்ற விகிதத்திலும்
A, C ஆகியோர் 2: 3 என்ற விகிதத்திலும் பெறக் கூடியதாக ஒரு தொகைப்பணம் பங்கிடப்பட்டது.
1) A, B, ஆகிய மூவரும் பெற்ற பண விகிதம் யாது?
2) பங்கிடப்பட்ட பணம் ரூ 460 எனின் A பெற்ற பணம் எவ்வளவு?

# 27 ஆயிரத்து 771 சிறுவர்களுக்கு போஷாக்குணவு வழங்கப்பட்டது

## மனிதமுன்னேற்ற நடுநிலைய இயக்குநர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

மனித முன்னேற்ற நடு நிலையம் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களில் இருக்கின்ற 153 நலன் புரி நிலையங்களில் தங்கியிருக்கும் 27 ஆயிரத்து 771 சிறுவர்களுக்கு இவ்வருடத்தில் இதுவரை போஷாக்கு உணவினை வழங்கியுள்ளதாக நடுநிலையத்தின் நிர்வாக இயக்குநர் அருட் திரு சீ.ஜீ.ஜெயக்குமார் தெரிவித்தார்.

தமது நிறுவனத்தின்செயல் திட்டங்கள் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

அண்மையில் இடம் பெற்ற இடம் பெயர்வுகளைத் தொடர்ந்து 800க்கு மேல் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரிசி, மா, சீனி, மிளகாய் போன்ற உலர் உணவினை வழங்கியுள்ளது.

அத்துடன் இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு 500க்கு மேற்பட்ட தற்காலிககுடிசைகளை அமைத்துக் கொடுத்துள்ளது எனவும் இடம் பெயர்ந்த நிலையில் இருக்கின்ற 4 ஆயிரத்து749பேருக்கு திருச்சிலுவைக் கூட்டத்தைச் சேர்ந்த அருட்சகோதரிகளின் உதவியுடன் மருத்துவ சிகிச்சையும் வழங்கப்பட்டதாக நிர்வாக இயக்குநர் குறிப்பிட்டார்.

இதேவேளையில், வறுமையும் வசதியின்மையும் காரணமாக பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர முடியாமல் தவித்த 11 மாணவர்களுக்கு மனித முன்னேற்ற நடுநிலையம் வேண்டிய உதவிகளையும், ஆதரவுகளையும் வழங்கி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (க-77)

### நவம்பர் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் வெளியான சைவ சமயப் பகுதி 1 ற்கான விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01) | 3 | 02) | 2 | 03) | [illegible] |
| 04) | 2 | 05) | 1 | 06) | 3 |
| 07) | 4 | 08) | 4 | 09) | 3 |
| 10) | 4 | 11) | 3 | 12) | 2 |
| 13) | 2 | 14) | 3 | 15) | 3 |
| 16) | 1 | 17) | 3 | 18) | 3 |
| 19) | 3 | 20) | 3 | 21) | 1 |
| 22) | 2 | 23) | 2 | 24) | 1 |
| 25) | 3 | 26) | 4 | 27) | 3 |
| 28) | 2 | 29) | 2 | 30) | 4 |
| 31) | 4 | 32) | 1 | 33) | 1 |
| 34) | 1 | 35) | 3 | 36) | 2 |
| 37) | 4 | 38) | [illegible] | 39) | 3 |
| 40 | 1 | | | | |

## ஸ்நபன அபிஷேகம்

(காரைநகர்)

காரைநகர் மணற்காடு அருள்மிகு தேவி கும்பநாயகி முத்துமாரி அம்பாள் கோவில் விஷேட ஸ்நபன அபிஷேக விஞ்ஞாபனம் எதிர் வரும் 30ஆம்திகதி வியாழன் அன்று இடம் பெறவுள்ளது. (ச)

## இன்று ஒரு தகவல்

### யாருக்குச் சொந்தம்?

ஒரு கிராமத்தின் எல்லையில் சந்நியாசி ஒருவர் வசித்து வந்தார். அவர் தினமும் வீடு வீடாகச் சென்று நற்சிந்தனைகளைப் பரப்பி வந்தார். பலர் இவரது போதனைகளைக் கடைப்பிடித்து வந்தனர். இவருடைய போதனைகளைப் பிடிக்காத சிலர் எதிர்த்தார்கள். இவர்கள் அதே சந்நியாசியை வாய்க்கு வந்தபடி வசைபாடினார்கள். ஆனாலும் சந்நியாசி அவற்றைக் காது கொடுத்துக் கேட்பதில்லை. அவர் வழமை போல நற்சிந்தனைகளைப் போதித்து வந்தார் சந்நியாசியைச் சிலர் திட்டுவதையும், அதற்கு அவர் பேசாமலிருப்பதையும் எல்லோரும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஒரு நாள் சந்நியாசியின் மேல் அன்பு கொண்ட இரண்டு இளைஞர்கள் அவர் இருந்த மரத்தடிக்குச் சென்றார்கள். அவர்களைக் கண்ட சந்நியாசி, அவர்களை அமரும்படி சொன்னார். பின் அவர்கள் தன்னைத் தேடி வந்த காரணத்தைக் கேட்டார். அதற்கு, அந்த இளைஞர்கள் இருவரும் 'சாமி இந்த ஊரில் நீங்கள் எந்தப்பிரதியுபகாரமும் எதிர்பாராமல் வருகிறீர்கள் ஆனால் சிலர் உங்களை வாய்க்கு வந்தபடி திட்டுகிறார்களே ஆனால், நீங்களோ எதையும் காதில் வாங்காமல் இருக்கிறீர்களே' என்றனர்.

அதைக் கேட்ட சந்நியாசி சிரித்து விட்டு, 'அதற்கு இப்போது என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறீர்கள்' என்று கேட்டார். 'உங்களை அவர்கள் திட்டினால் பதிலுக்கு நீங்கள் திட்டுங்கள் இல்லா விட்டால் நாங்கள் அவர்களைப் பார்த்துக் கொள்கிறோம்' என்றான் ஒரு இளைஞன்.

'இளைஞர்களே! நான் ஒரு சாது. கிடைத்ததை உண்டு என் காலத்தைக் கழித்து வருகின்றேன் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். ஒருவர் எனக்கு நிறையப் பணத்தைத் தர்மம் செய்ய வருகின்றார் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் நான் அதை வாங்க மறுத்து விட்டேன். நான் வாங்க மறுத்த பணம் யாருக்குச் சொந்தம்' என்று கேட்டார் சந்நியாசி.

'உங்களுக்குத் தர்மம் செய்ய வந்தவருக்குத் தான் அந்தப் பணம் சொந்தம்' என்று சொன்னார்கள். அந்த இரு இளைஞர்களும் உடனே சந்நியாசி, 'பணத்தை நாம் ஏற்க மறுத்தால் அதுஎப்படித் தர்மம் செய்ய வந்தவருக்குச் சொந்தமோ, அதைப் போல ஒருவருடைய திட்டுக்களை நாம் ஏற்றுக் கொள்ளாமல் மௌனமாக இருந்தால், அது திட்டியவர்களுக்குத் தான் சொந்தம்!' என்று சொன்னார்.

சந்நியாசியின் பதிலைக் கேட்டு இரு இளைஞர்களும் மகிழ்ச்சியடைந்து விடை பெற்றுச் சென்றார்கள்.

தொகுப்பு
கோ துஷியந்தன்

## வாந்தி எடுத்த நிலையில் 200 பேர் வைத்தியசாலையில்

### பியகம தொழிற்சாலையில் சம்பவம்

(கொழும்பு)

பியகம பகுதி பீங்கான் உற்பத்தி தொழிற்சாலையில் தொழில் புரிந்த 200 பேர், நேற்று திடீர் சுகவீன முற்ற நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் அனேகர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வேலை செய்து கொண்டிருந்த வேளையில், சிலர் வாந்தியெடுத்ததாகவும் இன்னும் சிலர் சுவாசிக்க சிரமமுற்றதாகவும் அதனைத் தொடர்ந்தே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதேநேளை,

மேற்படி 200 பேரில், எவருடைய நிலையும் கவலைக்கிடமானதாக இல்லையென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(உ)

## பாவனைக்கு தகுதியற்ற வாகனங்கள் கண்டுபிடிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இரு மாதங்களில் பாவனைக்குத் தகுதியற்றது எனக் கருதப்பட்ட 24 வாகனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வீதிச் சோதனையின்போது மேற்படி வாகனங்கள் இனங்காணப்பட்டதாக மட்டக்களப்பு மாவட்ட மோட்டார் வாகனப் பரிசோதகர் தெரிவித்தார்.

வீதிப் போக்குவரத்துக்கான தடை உத்தரவு மேற்படி வாகனங்களுக்கு விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-60)

## புலிகள்-அரசு பேச்சுவார்த்தையில் இந்தியாவின் பங்களிப்பும் அவசியம்

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சமாதானம் ஏற்படுத்துவது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேசும் போது, முக்கியமான கட்டங்களில் இந்தியாவின் பாரிய பங்களிப்பு அவசியமென பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்,

புத்தாயிரம் ஆண்டுக்கான இந்தியப் பொருளாதார அமைப்பின் உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளும் இலங்கைக் குழுவுக்கு தலைமை தாங்கிச் சென்ற பேராசிரியர், கடந்த ஞாயிறன்று இந்திய வெளிநாட்டுச் செய்தியாளரிடையே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையின் இனப்பிரச்சினைத்திர்வுக்கு இந்தியாவின் பங்களிப்பு மிகவும் அவசியமானதென்றென இலங்கை கருதுகிறது.

இதே கருத்தை ஆரம்பத்திலிருந்தே இலங்கைஅரசு வலியுறுத்தி வருகிறது,

பேச்சு வார்த்தையின் ஒவ்வொரு கட்டத்திலும் இந்தியாவின் ஆலோசனையும், ஆக்கபூர்வமான வழிகாட்டலும் அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (உ)

## வடக்கு-கிழக்கு யுத்தத்தில் சிறார்களின் உரிமை மீறப்படுகிறது சிறுவர் பாதுகாப்புஅமைப்பு கவலை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளில் தொடரும் யுத்தத்தினால் சிறுவர்களின் உரிமைகள் மீறப்படுவதுடன் அவர்கள் பலியாதல் மற்றும் காயமடைதல் என்பன அதிகரித்துள்ளமை தமக்கு கவலையளித்திருப்பதாக சிறுவர் பாதுகாப்புஅமைப்புத்தெரிவித்துள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணம் மூதூர்ப் பகுதிகளில் இடம்பெற்ற மோதல்களில், சிறுவர்கள் பலியானதுடன் காயமடைந்தமை தொடர்பாக வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்படி அமைப்பு தனது கவலையை வெளியிட்டுள்ளது.

மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும், பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச சாசனத்துக்கு மதிப்பளித்து, சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க இயன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவ்வமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை நோர்வே, பிரித்தானியா ஆகிய நாடுகள் இவ்வமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் முன்னணி நாடுகள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (உ-இ)

## மட்டக்களப்பைச் சேர்ந்த இருவர் பசறையில் கைது

(ஏறாவூர்)

மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த குடும்பஸ்தர்கள் இருவர் பசறை பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்காகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக பசறை மனித உரிமைகள் ஆணையகத்தினால் குறிப்பிட்ட நபர்களது குடும்ப உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

39 வயதான ஆறு பிள்ளைகளின் தந்தையான இராமையா சிவஞானம் மற்றும் 45 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையான ஆறுமுகம் சணபதி ஆகியோரே கடந்த 22ம் திகதி முதல் குடும்ப உறவினர்களால் தேடப்பட்டுவந்தனர்.

இது குறித்து மட்டக்களப்பு மனித உரிமைகள் ஆணையகத்தில் புகார் தெரிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

(க-108)

## புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள்

யாழ். அனலைதீவு அ. த. க. வித்தியாலயத்தில் தரம்-5 புலமை பரிசில் பரீட்சையில் கடந்த 1999ம் ஆண்டு ஒரு மாணவனும், 2000ம்ஆண்டு ஒரு மாணவனும் மிகவும் திறமையான முறையில்சித்தி பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பெறுபேறுகள் இப்பாடசாலையின் வரலாற்றிலேயே இது தான் முதல் தடவையாகும். என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிபர் த. மாதவன் 1998ம் ஆண்டு இறுதியில் இப்பாடசாலைக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட பின்னர் தான் இவ் இரு வருடங்களிலும் தொடர் சித்திகள் கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ் அதிபரைப் பாராட்டிக் கௌரவப்படுத்துவதுடன் ஏனைய ஆசிரியர்களையும் வெகுவாகப் பாராட்டுகின்ற அதே வேளை திறமையான அதிபரை இப் பாடசாலைக்கு நியமித்த தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரனையும் பாடசாலைச் சமூகமும் நாமும் பாராட்டி நமது நன்றிகளை தெரிவிப்பதாக வடலூர் சனசமூக நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

(க)

### மாவீரர் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் நுண்கலைப்பீட வளாகத்தினுள் பரவலாக அனைத்து இடங்களிலும் மாவீரர் நாள் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

இச்சுவரொட்டிகளில் தமிழீழத்தின் படத்தின் மத்தியில் ஒரு கல்லறை காணப்படுகிறது, அதன் கீழ் பாடல்வரிகளும் காணப்பட்டதாம்.

சுவரொட்டிகள் அடியில் புரட்சிகர மாணவர்கள் என ஒப்பமிடப்பட்டிருந்ததாம்.

(க-37)

### ஏழாலையில் அகண்டநாம பூஜை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் சாந்தியும் சமாதானமும் வேண்டி எதிர்வரும் 2ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை ஏழாலை களவாவோடை நாக பூஷணி அம்மன் கோவிலில் அகண்ட நாம பஜனை இடம் பெற உள்ளது.

ஆத்மஜோதி நா. முத்தையாவின் நினைவாகவும் மேற்படி பூஜை நிகழ்வு இடம் பெற உள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## முகாம்களில்பெருவெள்ளம் இடம்பெயர்ந்தோர் அவதி

(சுன்னாகம்)

கந்தரோடையில் தொண்டு நிறுவனங்கள் அமைத்துக் கொடுத்த இடம்பெயர்ந்தோருக்கான முகாம்கள் அண்மையில் பெய்த மழையின் நிமித்தம் மக்களின் இருப்பிடங்களை மீண்டும் பெயர வைத்துள்ளது.

முகாம் அமைந்திருந்த பகுதியில் வெள்ளம் தேங்கி நிற்பதனால் அங்கு புல்லும் நெல்லும் தான் குடிபுகுந்துள்ளதனைக் காணக்கூடியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச)

## பஸ்சிற்குள் குடை பிடிக்கும் அவல நிலையில்பயணிகள்

(கந்தர்மடம்)

பருத்தித்துறையிலிருந்து குஞ்சர் கடை புத்தூர், மருதனார்மடம் ஊடாக நவாலியை வந்தடையும் 767 இலக்க பஸ்சிற்கு பெருமளவில் கண்ணாடிகள் இல்லை. இதனால் இதில் பிரயாணஞ் செய்யும் அனைத்துப் பயணிகளும் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். மழை நேரத்தில் பஸ்கிற்குள்ளும் குடை பிடிக்க வேண்டிய நிலைமை என அவ் ஸ்வண்டியில் பயணம் செய்யும் யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீட மாணவன் ஒருவர் தெரிவித்தார். அத்துடன் இதற்கு இ போ. ச. தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என மேலும் தெரிவித்தார்.

(க-37)

## முஸ்லிம் ஓட்டோ சாரதி மர்மமுறையில் கொலை

(கொழும்பு)

கண்டிக்குச் செல்லவென வாடகைக்கு அமர்த்தப்பட்ட முஸ்லிம் ஓட்டோ சாரதி மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 21 ஆம் திகதி கல்முனையில் வாகனங்கள் வாடகைக்கு விடும் நிலையம் ஒன்றினூடாக இருவர் இவருடைய ஓட்டோவை வாடகைக்கமர்த்திச் சென்றதாகவும் அன்றில் இருந்து காணமல் போய்விட்ட தாகவும் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

பொலிஸாரின் தேடுதல் முயற்சியின் மூலம், மகியங்கனை எனும் இடத்தில் கொலை செய்யப்பட்ட நிலையில் ஓட்டோ சாரதியையும், தெல்தெனியா பிரதான வீதியில் ஓட்டோவையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சுலைமான்லெப்பை (வயது 63) என்ற 5 பிள்ளைகளின் தந்தையாரே மர்மமான முறையில் கொலை செய்யப் பட்டவராவர்.

(உ)

## லண்டனில் இருந்து வறியோர்க்கு உதவி

(மந்துவில்)

லண்டனில்இருக்கும் கரணவாய் வாசி ஒருவர் ஏழை மக்களுக்கு உதவுவதற்கென ரூபா 2 இலட்சத்தினை அனுப்பி வைத்துள்ளார்.

இவருடைய உறவினர் மூலம், இப்பணம் 200 வறிய குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. (உ-39)

# ஆடைத்தொழிற்சாலையில் தீவிபத்து

## 40 பேர் பலி; பெருமளவினர் காயம்

(டாக்கா)

பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் தீப்பற்றிக் கொண்டதில் நாற்பது பேர் உடல் கருகி மரணமாகினர். நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

டாக்காவின் புற நகரில் அமைந்துள்ள றாஞ்சி யாலட்டத்திலுள்ள ஆடைத் தொழிற்சாலையிலே இந்தப் பரிதாப சம்பவம் ஏற்பட்டது.

மின்சார ஒழுக்கின் காரணமாக ஆலையில் தீப்பற்றிக் கொண்டதாகவும் உள்ளே வேலை செய்த தொழிலாளர் வெளியேற முடியாது திணறி நெரிபட்டே கூடுதலானோர் இறந்ததாகவும் தீப்பற்றிக் கொண்ட பொழுது தொளாயிரத்துக்கு மேற்பட்டோர் உள்ளே வேலை செய்து கொண்டு இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத் தீ விபத்தில் பெண்களே கூடுதலாக இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

பங்களாதேஷில் சில வருடங்களாகக் குறிப்பாக ஆடை ஆலைகளில் ஏற்படும் தீ விபத்தினால் இருநூறுக்கு மேற்பட்டோர் இறந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (து)

உலக தரிசனம்

# முஸ்லிம் லீக் கட்சியிலிருந்து 4 முக்கியஸ்தர்கள் நீக்கம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஷ் ஷெரிப்பின் முஸ்லிம் லீக் கட்சியிலிருந்து நான்கு முக்கியஸ்தர்கள் விலக்கப்பட்டுள்ளனர்.

முஸ்லிம் லீக் கட்சி பெனாஷிர் பூட்டோவின் கட்சியுடன் கூட்டுச் சேர்வதையிட்டு விரக்தியடைந்த நவாஷ் ஷெரிப்பின் கட்சியை சேர்ந்த நான்கு முக்கிய செயல் அங்கத்தவர்கள் கட்சியின் காரியாலயத்தைக் கைப்பற்ற எடுத்த சதிமுயற்சி கண்டுபிடிக்கப்பட்டு அம் முயற்சி முறியடிக்கப்பட்டதை அடுத்தே மேற்படி நால்வரும் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். (க-து)

## 1003 கோடி டொலர் இலாபம்

(சென்னை)

மென்பொருள் உற்பத்தி மூலம் அடுத்த ஆண்டு ஆயிரத்து மூன்று கோடி டொலர் இலாபம் கிடைக்கும் என இந்தியா தெரிவிக்கிறது.

இந்திய மென் பொருள் விஞ்ஞான கழக அறிக்கையின்படி அடுத்த ஆண்டு மென் பொருளை கொம்யூட்டர் தொழில் நுட்ப ஏற்றுமதி மூலம் இவ்வளவு தொகை வருவாய் கிடைக்க இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. (து)

# இந்தியா-பாகிஸ்தான் பதற்ற நிலையை தணிக்க ஜப்பானிய தூதுவர் முயற்சி

(புதுடில்லி)

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான பதற்றத்தை நிறுத்த ஜப்பான் முன்வந்துள்ளது என அந்நாட்டு தூதுவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானிலுள்ள ஜப்பான் தூதுவரான சபாக்கி நுமாட் மேலும் தெரிவிக்கையில்; பிரச்சினைகளை இந்தியாவும் பாகிஸ்தானும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்க வேண்டுமென்றும் தெரிவித்தார்.

இரு நாடுகளினதும் அணுவாயுத நடவடிக்கைகளையிட்டுக் கவலையடைவதாகவும் அதேவேளை, அணுவாயுதம் பற்றி இப்பொழுது இரு நாடுகளும் முயற்சிகளை கைவிட்ட நிலையில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இரு நாடுகளும் சமாதான உடன்பாட்டுக்கு வரவேண்டுமாயின் பேச்சுவார்த்தைகளில் இறங்க வேண்டும் என்றும் தெரிவித்தார்

பாகிஸ்தானிடமிருந்து பேச்சு வார்த்தைகளுக்குரிய சாதகமான முடிவுகள் வரவில்லை என்றும் ஜப்பானிய தூதுவர் தெரிவித்தார். (து)

# பலத்த பாதுகாப்பின் மத்தியில் காட்மண்டு விமான நிலையம்

## அநாமதேய தகவலையடுத்து நடவடிக்கை

(காட்மண்டு)

நேபாளம் காட்மண்டு சர்வதேச விமான நிலையம் பலத்த பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

நேபாள விமானம் ஒன்று பாகிஸ்தானியரால் கடத்தப்பட இருப்பதாகவும் அது பாகிஸ்தானின் உளவுத்துறையான ஐ.எஸ்.ஐ அமைப்பின் சதித்திட்டமாக இருக்குமென்றும் கிடைத்த தகவலையடுத்து இதனை முறியடிக்கும் முகமாகவே விமான நிலையம் பலத்த பாதுகாப்புக்குட்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஷேக் முஜிபிர்ரகுமான் படுகொலைக்கு உடந்தையான பாகிஸ்தானிய கைதிகள் நேபாளத்தில் இருப்பதாகவும் அவர்களை கடத்திச் செல்லவே இந்தவிமானக் கடத்தல் சதி இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு இந்திய விமானத்தைக் கடத்திய பாகிஸ்தானிய சூத்திரதாரியே இதற்கும் திட்டமிட்டிருப்பதாகவும் நேபாள பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது (து)

# பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர் கவனம் தேவை

[சிங்கப்பூர்]

பெற்றோர்கள் நாட்டின் கல்வி அமைப்பைக் குறைகூறுவதிலும் பார்க்க பிள்ளைகளின் கல்வி மதிப்பீட்டில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று சிங்கப்பூர் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சில பகுதிகளுக்கு சுற்றுலாச் சென்ற இடத்தில் கல்வி அமைச்சர் உரை நிகழ்த்துகையில் பிள்ளைகளுக்குப் பாடச் சுமையை ஏற்றுபவர்கள் பெற்றோர்களேயென்றும் அவர்கள் தம் பிள்ளைகளின் திறமைகளை உணர்ந்து கொண்டு அவர்கள் மேல் பாடச்சுமையை சுமத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். (து)

# வணிகத்துறை மகாநாட்டில் சீன நேபாளக் குழுக்கள்

(பீஜிங்)

சீன வணிகத் தொழில் துறையும் நேபாள வணிகத் தொழில் துறையும் இணைந்த மகாநாடு சீனாவில் நடைபெற இருக்கிறது.

அடுத்த சில தினங்களில் நடைபெற இருக்கும் இந்த மகாநாட்டில் சீன வணிகத் தொழில் முனைவோரும் நேபாள வணிகத் தொழில் முனைவோரும் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

இரு நாடுகளுக்கிடையேயான வணிகத் தொழில் துறை பற்றிய ஆய்வினையும் மற்றைய நாடுகளுடன் எப்படி வணிகத் தொழிலை விருத்தி செய்யலாம் என்பது பற்றியும் ஆராய்ந்து, வணிகத் தொழிலை உலக தரங்களுக்கேற்ப வளர்ச்சியுறச் செய்வது எப்படி என்பது பற்றியும் ஆராய்ந்து ஒரு செயல் வடிவம் கொடுப்பதே இந்த மகாநாட்டின் நோக்கம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

# பெங்களூரில் திருவள்ளுவர் சிலைதிறப்பு

(பெங்களூர்)

பெங்களூரில் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலை அடுத்த மாதம் திறக்கப்பட இருக்கிறது.

இந்த சிலை திறப்பு விழாவில் கன்னட நடிகர் டாக்டர் ராஜ்குமார், பழ. நெடுமாறன் ஆகியோர் கலந்துகொள்ள இருக்கிறார்கள்.

சந்தனக் கடத்தல் வீரப்பன் விடுத்திருந்த நிபந்தனைகளில் திருவள்ளுவர் சிலை திறக்கப்படுவதும் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (து)

# ★ விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனின் பெயரில் அர்ச்சனைசெய்தவர் கைது

(சென்னை)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்த நாளை ஒட்டி, அவரின் பெயரில் இறைவனுக்கு அர்ச்சனை செய்ய முயன்றவர் தமிழ்நாடு விருது நகரில் கைதானார்.

தமிழர் தேசிய இயக்கப் பிரமுகரான சோமு என்பவரே இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்டவராவார்.

பிரபாகரனின் பிறந்த நாளுக்கு வாழ்த்து தெரிவிக்கும் வகையில் சென்னையில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டமைக்கு தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. மூப்பனார், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஆகியோர் கண்டனம் வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# நீரிழிவு நோயாளர் சிங்கப்பூரில் அதிகரிப்பு

சட்டத்தை வாபஸ்பெறக்கோரி

# சிங்கப்பூரில் அதிகரிப்பு

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் நீரிழிவு நோய் உள்ளவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

சிங்கப்பூர் சுகாதார அமைச்சர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்; நாட்டில் வாழும் முப்பது வயது தொடக்கம் அறுபத்தைந்து வயது வரை உள்ள மக்களில் மூன்று பேருக்கு ஒருவர் நீரிழிவு நோயினால் பீடிக்கப்பட்டிருக்கிறார் என்றும் தெரிவித்தார்

அவர் மேலும் தொடர்கையில் நீரிழிவு நோய்க்கு மருந்தல்ல முக்கியத்துவம் உணவுக் கட்டுப்பாடே முக்கியம் என்று தெரிவித்தார். (து)

# சந்தனக்கடத்தல் வீரப்பன் சரணடைய வேண்டும்

## பழ. நெடுமாறன் விருப்பம்

(புதுடில்லி)

வட இந்திய சாம்பல் பள்ளத்தாக்கு கொள்ளையர்கள் சரணடைந்தது போன்று, சர்வோதயத்தலைவர் நாராயணன் முன்னிலையில் சந்தனக்கடத்தல் வீரப்பன் சரணடைவதற்கு ஏற்ற வழிவகைகள் செய்யப்பட வேண்டும் என பழ. நெடுமாறன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இருப்பினும். வீரப்பன் சரணடைவதாயின் அவன் முன்வைக்கும் கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்க வேண்டியது இந்திய அரசின் கடமை எனவும் இந்த விடயத்தில் அரசு கைக்கொள்ளப்போகும் வழிமுறையே அவனது சரணடைவை ஊக்கப்படுத்தும் எனவும் அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேசமயம், மாபெரும் கொள்ளைக் காரியான பூலான்தேவி, சில கோரிக்கைகளுடன் சரணடைந்ததும் தற்போது அரசியலில் ஈடுபட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

படுவதும் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது, (து)

# துபாய் இளவரசர் இணையத்தில்

(இலண்டன்)

இணையம் மூலமாக, குடிமக்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்கும் திட்டமொன்றினை துபாய் இளவரசர் ஷேக் முகமத் முன்னெடுக்கவுள்ளார்.

உலகனைத்தும் இருந்து வரும் வளைகுடா பகுதி அரசியல் மற்றும் பன்னாட்டு அரசியல் குறித்தபொதுமக்களின் வினாக்களுக்கு இவர் விடையளிப்பார் என தெரியவந்துள்ளது. (உ)

இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்டவராவார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின்பிறந்ததினமான 26 ஆம திகதி விருதுநகரில் உள்ள ஆலயம் ஒன்றுக்கு தமது கட்சி ஆதரவாளர் சகிதம் சென்ற சோமு, பிரபாவின் பெயரில் அர்ச்சனை செய்யுமாறு ஆலயஅர்ச்சகரை கேட்டதாகவும், அர்ச்சகர் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கவே பொலிஸார் இவரை கைது செய்து சென்றிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதேசமயம், தலைவர்

பிடத்தக்கது.

# சட்டத்தை வாபஸ்பெறக்கோரி டில்லியில் முழுநாள் கதவடைப்பு

(புதுடில்லி)

புதுடில்லியில் நேற்று பூரண கதவடைப்பு இடம்பெற்றதாக புதுடில்லிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நகர்ப்புறத்தை மாசுபடுத்தும் தொழிற்சாலைகளை அகற்றும் தீர்மானத்தை எதிர்ந்து இந்த பூரண கதவடைப்பு இடம்பெற்றது; (து)

# தொடரும் மழை; வெள்ளத்தால் சுமத்திராவில் 62 பேர் பலி

(சுமத்திரா)

தொடரும் மழையினாலும் மண்சரிவுகளினாலும் இந்தோனேசியாவின் சுமத்திராப்பகுதியில் அறுபத்திரெண்டுபேர் மாண்டனர்.

தொடர்ந்து இப்பகுதியில் மழை பெய்து வருவதால் வீடுகள் மற்றும் தொழிற்கூடங்கள் யாவும் வெள்ளத்தில் மூழ்கிவிட்டனவென்றும் மண்சரிவினால் வீடுகள் இடிந்ததுடன் வீதிகள் பல மூடப்பட்டன வென்றும் தெரிவிக்கப்படுகிறது.

பலியானோரைத் தவிர எழுபத்தைந்துபேர் காயங்களுடனும் மற்றும் திடீர் நோய்களுக்காகவும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பல்லாயிரக் கணக்கானோர் வெள்ளத்தில் தத்தளித்து தவிக்கிறார்கள் என்றும் மேட்டு நில பொதுக் கட்டடங்களில் தஞ்சம் அடைந் திருக்கிறார்களென்றும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (து)

இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை
வாயின் அது ஒப்பது இல்.
- குறள் -

# வலம்புரி

## சமாதானத்தின் தூரம்

இனப் ரச்சினை விடயத்தில் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சோல் ஹெய்மின் முயற்சிகள், ஜனாதிபதி சந்திரிகாவின் லண்டன் பயணம் இவையெல்லாவற்றிற்கும் மேலாக விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் முக்கியத்துவம் வாய்ந்த மாவீரர் தின உரை.

இவற்றின் மத்தியில் இனப்பிரச்சினையில் ஏதோ ஒரு மாற்றம் நிகழும்போல் தெரிகிறது.

எனினும் அம்மாற்றம் உடனடிச்சாத்தியமில்லை என்பதும் தெளிவு. ஏனெனில், இனப்பிரச்சினைத் தீர்வில் அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் ஒருவர்மீது ஒருவர் பரிபூரண நம்பிக்கை வைக்கப்போவதில்லை என்பது சர்வ நிச்சயம். நம்பிக்கையில்லாத நிலையில் பிரச்சினைக்கு எவ்வகையிலும் தீர்வுகாண முடியாதென்பதனாலேயே மூன்றாந்தர் மத்தியஸ்தம் அவசியம் என்பது வலியுறுத்தப்படுகிறது.

இலங்கையின் இனப் பிரச்சினை விவகாரத்தில் வெளிநாடுகள் தலையிட்டு அரசையும், விடுதலைப் புலிகளையும் இணக்க நிலைக்குக் கொண்டுவந்தாலும், அரசின் பக்கம் பல்தரப்பட்ட எதிர்ப்புகளை ஏற்படுத்துவதற்காக பேரினவாதக் கட்சிகள் தம்மைத் தயார்படுத்துவதில் ஈடுபட்டுள்ளன. அதுவும் பௌத்த மகா சங்கம் தனது எதிர்ப்பை தெரிவித்தால் அரசு நிச்சயம் பெட்டிப்பாம்பாக மாறும் என்பது கடந்த காலம் நமக்குப் புகட்டிய பாடம்;

ஆனால் புலிகள் தரப்பில் அவர்கள் எடுக்கும் முடிவுக்கு தமிழ்மக்களிடையே எதிர்ப்புகளின்றி

# வளர்முகநாடுகளில் காணப்படும் 'அல்சர்'

# சமய நம்பிக்கைகளும் காரணமாக அமையுமா?

பொதுவாக எமது பிரதேச மக்களிடையே ''அல்சர்/குடற்புண்'' என்னும் சொற்பதம் அடிக்கடி பிரயோகிக்கப்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. நாம் மருத்துவத்தில் உடலின் சகல பகுதிகளில் ஏற்படும் புண்களையும் ''அல்சர்'' என்று அழைத்தாலும் பொதுவாக உணவுக்கால்வாய்த் தொகுதியின் சில பாகங்களில் ஏற்படுகின்ற ஒரு வகையான புண்களையே ''அல்சர்'' என்று நாம் அழைக்கின்றோம். இது வளர்முக நாடுகளில் பொதுவானதொரு நோயாகக் காணப்படுகின்றது.

### அல்சர் ஏற்படும் இடங்கள்

1. களம் எனப்படுகின்ற அங்கத்தின்கீழ்ப்பகுதி
2. இரைப்பை
3. சிறுகுடலின்ஆரம்பப்பகுதி

ஆகிய இடங்களில் பொதுவாக ஏற்பட்டாலும் மிக அரிதாக வேறு சிலஇடங்களிலும் ஏற்படலாம்.

### குடற்புண்கள்

நாம் உண்ணும் உணவின் சமிபாட்டினை இலகுவாக்குவதற்காக இரைப்பையிலிருந்து அமிலத் தன்மையான பதார்த்தம் சுரக்கப்படுகின்றது. அத்துடன் நொதியங்களும் சுரக்கப்படுகின்றன. இச் சுரப்புகள் எமது சமிபாட்டுத்தொகுதியின் சுவர்ப்பகுதியைத் தாக்காமல் இருப்பதற்காக சீதப்பாதுகாப்புப் படை ஒன்று உள்ளது. இச் சீதப் படைப் பாதுகாப்பிற்கும், அமிலச் சுரப்பிற்கும் இடையிலேற்படுகின்ற சமநிலைக் குழப்பம் காரணமாக குடற்புண்கள் ஏற்படுகின்றன. அதாவது அதிகளவு அமிலஞ் சுரத்தல் அல்லது சாதாரண அமிலச் சுரப்பு இருக்கும் பொழுதே சீதப் படையில் ஏற்படும்குழப்பநிலை காரணமாக இவ்வகையான புண்கள் ஏற்படுகின்றன.

### ஏற்படுத்தும் காரணிகள்

மேற்கூறிய சமநிலைக் குழப்பத்தை பலவகையான காரணிகள்ஏற்படுத்தினாலும் பின்வருவனவற்றை முக்கியமாகக்கருதலாம்.

1. நேரத்திற்கு உணவு உட்கொள்ளாமை அல்லது உணவு உண்ணாமல் விடுதல் அல்லது வறுமை காரணமாக சிலநேர உணவுகளைத் தவிர்த்தல்
2. பல்வேறு வகையான மன அழுத்தங்கள், கோபம், பதற்றம்போன்றன.

இதுவே குடற்புண்கள் ஏற்படுவதில் அதிக பங்குவகிப்பதாக அண்மைக்காலங்களில் கருதப்படுகின்றது.

இவற்றைவிட வேறு சிறு சிறு காரணிகள் உதாரணமாக பரம்பரைக் காரணிகள் வேறுசில உணவுக்கால்வாய்த் தொகுதியில் காணப்படும் நோய்களும் அல்சர் ஏற்படுவதில் பங்கு வகிக்கின்றன.

### பழக்க வழக்கம்!

யாழ்ப்பிரதேசத்தைப் பொறுத்தவரையில் எம்மில் பலர் வேலைப்பளு காரணமாக சரியான நேரத்தில் உணவு உட்கொள்வதில்லை. அத்துடன்கந்தசஷ்டி போன்ற கடுமையான விரதங்களை மேற்கொள்ளுவதன் மூலம் உணவு உட்கொள்ளாமல் விடுகின்றனர். இவ்வாறாக நேரத்திற்குஉணவுஉட்கொள்ளாமல் விடுவதால் இரைப்பைப் பகுதி கூடிய நேரம்உணவின்றி இருப்பதால் அமிலச் சுரப்பும்நொதியங்களும்குடற்சுவரைத் தாக்குகின்றன. இதனால் குடற்புண்கள் ஏற்படுகின்றன.

மேலும் பல்வேறு வகையான மன அழுத்தங்கள் உதாரணமாக வேலைப்பளு காரணமான மன அழுத்தம், பரீட்சை காரணமான மன அழுத்தம், அதிக கவலை, கோபம், பதற்றம் போன்றவையும் அதிகளவு அமிலச் சுரப்பைத்தூண்டுவதன்மூலம் குடற்புண்களை ஏற்படுத்துகின்றன.

இவற்றைவிடயாழ்ப்பாணத்தில் புகைப் பிடித்தல், மதுபானம் அருந்துதல், கட்டுப்பாடற்றNSAIDவகையைச்சார்ந்த அஸ்பிறின், இன்டோசிட், புருபென்மருந்துகளின்அதிகளவான பாவனையும் அல்சரை ஏற்படுத்துவதில் பங்கு வகிக்கின்றன.

எல்லா வயதினரிடையேயும்மேற்கூறிய காரணிகளால் குடற்புண்கள் ஏற்படலாம். கூடுதலாகஆண்களிலும்குருதி வகை 'O' வைச்சார்ந்தவர்களிலும் கூடுதலாக ஏற்படுவதாகக் கருதப்படுகின்றது. இவ்வாறு குடற்புண்கள் ஏற்பட்டவர்களில் பலவகையான குணங்குறிகள் ஏற்படலாம்.

குடற்புண்கள் இருக்கும்இடத்தைப் பொறுத்து இந்நோவு உணவு உட்கொள்ளும்போது கூடலாம்அல்லது தணியலாம். சிறுகுடல் பகுதியில் காணப்பட்டால் உணவு உட்கொள்ளும்போது நோவு குறையும். அதேவேளை இரைப்பையில் குடற்புண்கள் காணப்பட்டால் உணவு உட்கொள்ளுவதால் வயிற்றுநோவு கூடும். மற்றைய குணங்குறிகளும் காணப்படும் இடத்தைப் பொறுத்துவேறுபடலாம் சிலரில்பசியின்மை, நிறையிழப்பு, வயிற்றுக்குமட்டல், வாந்தி என்பனவும் காணப்படலாம்.

இவ்வாறான குணங்குறிகள்காணப்படுபவர்கள் வைத்தியரை நாடி மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் குடற்புண்கள்ஆரம்பநிலையாகவும் இருக்கலாம் அல்லது புற்று நோயைஏற்படுத்துகின்றபாரதூரமான குடற் புண்களாகவும்இருக்கலாம்.

### பரிசோதனைகள்

1. வாய்மூலம் $BaSO_4$ கலந்த இரசாயனப் பதார்த்தத்தை குடித்த பின்னர் எடுக்கும் Xray படம்.
2. குழாய் விட்டு பரிசோதனை செய்தல்.
3. நொதியத்தின் தொழிற்பாட்டினை அறியும் பரிசோதனை.

போன்ற மருத்துவப் பரிசோதனைகள் பொதுவாக மேற்கொள்ளப்படுகின்றன.

### சிகிச்சை முறைகள்

மேற்கூறிய மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டு அல்சர் இருப்பதை உறுதிப்படுத்திக் கொண்டவர்கள் பின்வருவனவற்றைக்

## மருத்துவ விளக்கம்

கட்டாயமாக கடைப்பிடிக்க வேண்டும்.

1. புகைப் பிடிப்பவர்கள், குடிப்பழக்கமுள்ளவர்கள் முற்றாக அவற்றை நிறுத்துதல்.
2. நேரத்துக்கு உணவெடுக்

றைக் கூட்டலாம். அதேவேளையில் கோப்பி, அமிலம் நிறைந்தஉணவுகள், உறைப்பானஉணவுகள் எடுப்பதைத் தவிர்த்தல்.

4. அத்துடன் NSAID வகையைச் சார்ந்த Aspirin போன்ற முன்பு கூறிய மருந்துகளின் பாவனையை நிறுத்துதல்;
5. மனவழுத்தங்களை குறைப்பதற்கு உடற்பயிற்சிசெய்தல், யோகாசனப் பயிற்சியில் ஈடுபடல் போன்றவற்றை மேற்கொள்ளலாம்.
6. வைத்திய ஆலோசனையுடன் நுண்ணுயிர்களை அழிப்பதற்கு நுண்ணுயிர்க் கொல்லிகளைப் பாவித்தல்.
7. இவற்றைவிட அமிலச் சுரப்பைத் தடுப்பதற்கு ( imitidine போன்ற மருந்துகளையும், அமிலச் சுரப்பை நடுநிலைப்படுத்துவதற்கு Antacids போன்ற மருந்துகளையும் வைத்திய ஆலோசனையுடன் பெறலாம்.
8. மேற்கூறிய வைத்திய முறைகளால் குணமடையாதவர்கள் அறுவை மருத்துவரின் ஆலோசனையுடன் சத்திர சிகிச்சை மேற்கொள்ளலாம்.

குடற்புண்கள் ஏற்படுபவர்கள் வைத்தியச் சிகிச்சைகள் மேற்கொள்ளாதவிடத்து பின்வரும் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம்.

1. வெளியே தெரியாமல்ஏற்படும் குருதிப்பெருக்கு- இதனால் மரணம் கூட சம்பவிக்கலாம்.
2. குருதிச்சோகை
3. குடலில் துளைகள் ஏற்பட்டு அமிலம், மற்றும் சுரப்புகள் வயிற்றுக் குழிக்குள் விடப்படுவதனால் ' cute Abdomen போன்ற பாரதூரமான விளைவுகள்ஏற்படலாம்.
4. குடலின் உட்புறத்தில் மடிப்புகள் ஏற்பட்டு அடைப்புகள் ஏற்படலாம்.

ஆகவே. இவ்வாறான பார

என்.ராஜேஸ்கண்ணன்
எஸ் துரைசாமி சர்மா
(4ஆம் வருட மருத்துவபீட மாணவர்கள்)

பாடம்,

ஆனால் புலிகள் தரப்பில் அவர்கள் எடுக்கும் முடிவுக்கு தமிழ்மக்களிடையே எதிர்ப்புகளின்றி ஏகோபித்த ஆதரவே கிடைக்கும்.

மிகக்குறைந்த - தமிழ் மக்களின் அபிலாசைகளை முழுமையாக நிறைவேற்றாத, தீர்வுத்திட்டத்தை பாராளுமன்றில் சமர்ப்பிப்பதையே தடுப்பதற்காக நடுவீதியில் உண்ணாவிரதம் இருந்த பௌத்த பிக்கு இன்னமும் உயிரோடுதான் இருக்கிறார் என்பதையும் அவரை ஊக்குவித்த மகாசங்கத்திற்கும் மனமாற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை என்பதும் நோக்குதற்குரியது.

இந்நிலையில் நோர்வேயின் சமாதான முயற்சி - ஜனாதிபதியின்லண்டன் பயணம் - பிரபாகரனின் மாவீரர் உரை. இவையெல்லாம் சமாதானத்திற்கான பாதையைச் சுட்டிநின்றாலும், சமாதானத்தின் தூரம் தொலைவில் உள்ளது போல் தெரிகிறது.

---

வறுமை காரணமாக சிலநேர உணவுகளைத் தவிர்த்தல்
2. பல்வேறு வகையான மன அழுத்தங்கள், கோபம், பதற்றம்போன்றன.
3. புகைப் பிடித்தல், மதுபானம்அருந்துதல்.
4. சில வகையான மருந்துகளின் கட்டுப்பாடற்றஅதிகளவானபாவனை.
5. குறிப்பிட்ட வகையான நுண்ணங்கிகளின் தொற்று பக்ரீரியாவின் தொற்று.

தாகக் கருதப்படுகின்றது. இவ்வாறு குடற்புண்கள் ஏற்பட்டவர்களில் பலவகையான குணங்குறிகள் ஏற்படலாம்.

### குணங்குறிகள்

பொதுவாக வயிற்றுநோவு அல்லது வயிற்றெரிவு காணப்படும். இது முக்கியமான குணங்குறிகளாகும். பெரும்பாலும் நடுமேல் வயிற்றுப் பகுதியில் இவ்வகையான நோவுஏற்படுகின்றது. மேலும்

1. புகைப் பிடிப்பவர்கள், குடிப்பழக்கமுள்ளவர்கள் முற்றாக அவற்றை நிறுத்துதல்.
2. நேரத்துக்கு உணவுஎடுத்தல், மற்றும் விரதங்கள் இருப்பதைத் தவிர்க்க வேண்டும்.
3. சில வகையான உணவுப் பதார்த்தங்களை உதாரணமாக பால், பால்த் தயாரிப்புக்கள், பப்பாளிப்பழம் போன்றவற்

மடிப்புகள் ஏற்பட்டு அடைப்புகள் ஏற்படலாம்.

ஆகவே இவ்வாறான பாரதூரமான சிக்கல்களைத் தடுப்பதற்கு குடற்புண்கள் இருப்பதற்குரிய குணங்குறிகள் ஏற்பட்டவுடன் வைத்தியரை நாடி அவரின் ஆலோசனைப்படி தகுந்த வைத்திய சிகிச்சைகளைப் பெற்றுகுடற்புண்களைப் பூரணகுணமாக்கலாம்.

---

# அடுத்த வருடத்தை யுத்த ஆண்டாக பிரகடனப்படுத்த படையினர் முஸ்தீபு

## பாரிய ஆயுதக் கொள்வனவிற்கும் முயற்சி

(கொழும்பு)

அடுத்த ஆண்டை யுத்த ஆண்டாகப் பிரகடனப்படுத்த, பாதுகாப்பு தரப்பில் முஸ்தீபுக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஊகங்கள் வெளியாகியுள்ளன.

இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து, சமாதானப் பேச்சுக்கள் நடத்துவது தொடர்பாகஆலோசனைகள் நடைபெற்று வரும் அதே வேளை, மறுபுறத்தில் வெளிநாடுகளில் இருந்து பாரியஆயுதங்களைக் கொள்வனவு செய்வதில் அரசு காட்டிவரும் நாட்டம்மேற்படிஊகத்திற்கு வலு சேர்ப்பதாக அமைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

படைத்தரப்பை பலப்படுத்தும் நடவடிக்கையின் ஓரங்கமாக 15 ஆயிரம் பேரை புதிதாகச் சேர்க்கும் முயற்சி அண்மையில் மேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இராணுவத்தினர் மற்றும் கடற்படை, விமானப்படையின் ஆயுத பலத்தை அதிகரிக்கும் வகையில் பல ஆயிரம் கோடி ரூபாவுக்கு நவீனரக போர்த் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டும் வருகிறது.

இதேசமயம், இவ்வருடத்தினை யுத்த ஆண்டாகப் பிரகடனப்படுத்திய விடுதலைப் புலிகள், ஓயாத அலைகள் இராணுவநடவடிக்கைமூலம், ஆனையிறவு இராணுவப் படைத்தளம் மற்றும் தென்மராட்சியின் பலபாகங்களைக் கைப்பற்றியமையும், படைத்தரப்பினர் 6 மட்டுப்படுத்தப்பட்ட இராணுவநடவடிக்கைகளை நடத்தி இவற்றில் கைப்பற்றப்பட்ட சில பகுதிகளை மீட்டெடுத்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ)

---

## மருத்துவ முகாம்

(கல்வயல்)

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் பிறந்ததினத்தையொட்டி இலவச வைத்திய பரிசோதனை முகாம் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

இராமநாதன் வீதியில் அமைந்துள்ள பகவான்சத்திய சாயி பாபா சேவா சங்க மண்டபத்தில் ஷை சங்க ஆதரவுடன் இடம் பெற்ற இப்பரிசோதனையில்நீரிழிவு, இரத்த அழுத்தம் மற்றும் கண் முதலியவற்றுக்கான்வைத்திய பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டன.

லயன்ஸ் கழகத்தின் வலயத் தலைவர் 'வைத்திய கலாநிதி சி. சு. அருளானந்தம் தலைமையில் இம் முகாம் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(ச-111)

# இயல்பு நிலை....

குழுவினரை அண்மையில் நாம் வன்னியில் சந்தித்த போது எமது இயக்கத்தின் இந்த நிலைப்பாட்டைதெளிவாக அழுத்தம் திருத்தமாக எடுத்து விளக்கினோம், சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு நாம் நிபந்தனை எதனையும் விதிக்கவில்லை ஆயினும் பேச்சுவார்த்தை உகந்ததாக நல்லெண்ண இயல்பு நிலையுளும் உருவாக்கப்படவேண்டும் என்பதன் அவசியத்தை நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

20 ஆண்டுகளுக்கு மேலாக பரஸ்பரம் பகை உடையவர்களாக இருந்தவர்கள் சந்தேகத்தின் பேரில் ஈடுபட்டுவரும் இரு தரப்பினரும் சந்தேகம் தொடர்ந்தபடி திடீரென சமாதான பேச்சு வார்த்தையில் ஈடுபடுவது நடைமுறை சாத்தியம் அல்ல இதனாலதான் போர் நெருக்கடியை படிப்படியாக தளர்த்தி ஒரு போர் ஓய்ந்த சமாதான சூழ்நிலையில் நல்லெண்ணத்துடன் பேச்சுக்கள் நடைபெறுவதனையே நாம் விரும்புகின்றோம், இயல்புநிலை என்னும்போது தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பொருளாதாரத்தடை நீங்கி எமது மக்களின் வாழ்க்கை இயல்பான நிலைக்கு திரும்ப வேண்டுமென கருதுகிறோம்.

எமது மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் குறைந்து பரஸ்பர நல்லெண்ணம் நிலவும் சூழ்நிலை தோன்றுவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை நாம் வரவேற்கின்றோம் அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமானால் பதிலாக நாமும் நல்ல முடிவுகளை எடுப்போம் சமாதான பேச்சுவார்த்தை என்பது தமிழ் மக்களுக்கு ஒரு புதிதான விடயம் அல்ல தமிழ் மக்கள் சார்பில் எமது விடுதலை இயக்கம் எமக்கு முந்திய தலைமைகளும் கொழும்பு அரசுடன் எத்தனையோ தடவைகள் பேச்சுக்களை நடத்தியு ளன எனவும் பிரபாகரன் தனது உரையில் குறிப்பிட்டார்.

## சுதந்திரத்திற்காக எதனையும் எதிர்கொள்ளத் தயார்!

எமது மண்ணுக்காக எமது மக்களுக்காக, விடுதலை என்ற உன்னத இலட்சியத்திற்காக, தமது இன்னுயிரை ஈகை செய்தவீரர்களை நினைவு கொள்ளும் இன்றைய நாள் ஒரு புனித நாளாகும்.

நீங்காத நினைவுகளாக எம்மோடு ஒன்றிக்கலந்து விட்ட உணர்வுகளாக காலத்தால் சாகாது என்றும் எம்முள் உயிர் வாழும் இம் மாவீரர்களை கௌரவிப்பதில் தமிழீழம் பெருமை கொள்கிறது.

மாவீரர் நினைவாக ஈகைச் சுடரை ஏற்றும்போதும், அந்த எரியும் சுடரில், அந்த தீ நாக்குகளின் அபூர்வ நடனத்தில், அந்த அற்புதமான வடிவத்தில், அக்கினியாக பிரவாகித்தபடி ஆயிரம் ஆயிரம் மனித தீபங்கள் நெருப்பு நதிபோல் ஒளிகாட்டி வழிகாட்டிச் செல்லும் ஒரு அதிசயக்காட்சி திடீரென கடற்கரையில் தோன்றி மறைந்தது.

மாவீரர்களே எமது எதிர்கால சுதந்திர பயணத்தின் வழிகாட்டிகள். அவர்களது வாழ்வும் வரலாறும், எமது இலட்சிய உறுதிக்கு உரமேற்றுபவை அவர்களே எமக்கு ஒழிகாட்டிகள்.

மாவீரர்களுக்கு ஈகைச்சுடரேற்றி அவர்களுக்கு. அவர்களது நினைவுகொள்ளும் புனிதநாளில் எமது இதயங்களின் இலட்சிய நெருப்பை மூட்டிக் கொள்வோம்.

எமது தேசத்தின் சுதந்திரத்திற்காக அந்த உன்னத இலட்சியத்தை அடைவதற்காக எத்தகைய இடர்களையும், எத்தகைய சவால்களையும், எத்தகைய துன்பங்களையும், எதிர் கொள்ளத் தயாராக இருக்கிறோமென நாம் எமக்குள் ஓர்வீரசபதம்செய்துகொள்வோம்.

## ஆனையிறவுப் படைத் தளம் கைப்பற்றப்பட்டமை புலிகளின் இராணுவ சாதனை

எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் இன்று நாம் ஒரு முக்கிய திருப்பு முனையை அடைந்திருக்கிறோம். எமது படையணிகள் ஒப்பற்ற இராணுவ சாதனைகளை நிலைநாட்டி எமது தேசத்தின் கலாசார பெருமைவாய்ந்த யாழ்ப்பாணத்தின் வாசற்படியை அண்மித்து நிற்கிறோம்.

யாழ்ப்பாணத்தின் கழுத்தைத் திருகியபடி குடாநாட்டை வன்னி மாநிலத்துடன் துண்டிக்கப்பட்டிருந்த ஆனையிறவு படைத்தளம் எமது எல்லைப்படை வீரர்களால் மீட்கப்பட்டது எமது மாபெரும் இராணுவ வெற்றியாகும்.

தகர்க்க முடியாத இரும்புக் கோட்டையாக 20 ஆயிரம் இராணுவத்தினருடன் தொடர் வலய முகாம்களால் சூழப்பட்டு பரந்தனில் இருந்து பள்ளவரைக்கும் கரையோரமாக 80 சதுரமைல் நிலப்பரப்பைக் கொண்ட ஆனையிறவுப் பெருந்தளம், எம்மால் வெற்றி கொள்ளப்பட்ட நிகழ்வானது உலகப் போரியல் வரலாற்றில் பதியப்பட்ட மகத்தான இராணுவ சாதனையாகும்.

## மீண்டும் அமைதியற்ற ஆறாண்டுகள்

வன்முறையைப் பாவித்து மிகவும் கேவலமான தேர்தல் மோசடிகளைச் செய்து ஜனாதிபதித் தேர்தலை கேலிக் கூத்தாக்கிய ''தமிழ் துரோகிகளும்'' இந்த ஆட்சி பீடத்திற்கு முண்டு கொடுத்துநிற்கிறார்கள்.

இப்படியாக இனவாதிகளையும் தமிழினத் துரோகிகளையும் நிர்வாக உயர் பீடங்களில் அமர்த்தி அவர்களின் தயவில் தங்கிநிற்கும் சந்திரிகா அரசு தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையைத் தீர்க்க முடிவான முடிவுகளை எடுக்குமா என்பது சந்தேகமே.

இப் போரில் ஈட்டிய வரலாற்று சமரில் புலிகள் வகுத்த நுட்பமான போர்வியூகங்களும், திகைப்பூட்டும் தரை இறக்கங்களை, வீரம் செறிந்த தாக்குதல்களை, தந்திரோபாயங்களை போரியல் கலையில் எமது விடுதலை இயக்கத்தின் அபாரமான வளர்ச்சியையும், முதிர்ச்சியையும் உலகத்திற்கு எடுத்துக் காட்டியது.

## 30 ஆயிரம் படையினரைக் காப்பாற்ற சர்வதேச உதவியை சந்திரிகா நாடினார்

ஆனையிறவுப் பெருந்தளத்தை வெற்றி கொண்டு தென்மராட்சியிலும், வடமராட்சிகிழக்கிலும் பெருமளவு நிலங்களை மீட்டெடுத்த அதே வேகத்தோடு, கிழக்கு அரியாலை வழியாக எமது படையணி ஒன்று யாழ்ப்பாண மாநகராட்சி எல்லைக்குள் பிரவேசித்தது அதேசமயம் எமது மற்றப் படையணிகள் தனங்கிளப்பு வழியாக நாவற்குழி, கைதடி, மட்டுவில் பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். யாழ்ப்பாண நகரம் அரைகுறை வியூகத்தில் சுற்றி வளைக்கப்பட்டது. இதனை அடுத்து ஒரேயொரு ஆகாய விநியோக மார்க்கமாக விளங்கிய பலாலி பெருந்தளம் பீரங்கித் தாக்குதலுக்கு இலக்காகியது. எமது மின்னல் வேகத்தில் நிகழ்ந்த இத்திடீர் திருப்புமுனைகளின் விளைவாக சந்திரிகா அரசு என்றுமில்லாத இராணுவ நெருக்கடியைச் சந்தித்தது. சந்திரிகா அம்மையார் நிலைகுலைந்து போனார். ஆயினும் இச் சூழ்நிலையைப் பயன்படுத்தி சர்வதேச உலகத்தின் உதவி பெற்று நெருக்கடியைச் சமாளிக்கத் திட்டமிட்டார்.

யாழ்ப்பாணம் புலிகளிடம் வீழ்ந்தால் அங்குள்ள30ஆயிரம் படையினருக்கு உயிராபத்து ஏற்படுமென சர்வதேசத்திலும் அபாயச்சங்கை ஊதினார். இந்த அபாய அறிவிப்பைக்கேட்ட அனைத்துலக நாடுகளும் அம்மையாருக்கு உதவிசெய்யஉடனே முன் வந்தன.

இந்தியக் கடற்படையின் உதவியுடன் சிங்கள இராணுவத்தினரைப் பாதுகாக்க, மீட்டெடுக்க இந்தியா முன்வந்தது. பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான், சீனா ,ரஷ்யா போன்ற நாடுகள் அவசர ஆயுத உதவி வழங்க முன்வந்தன.

முழு உலகமுமே அம்மையாரின் பின்னால் அணி திரண்டது. மிகவும் சக்திவாய்ந்த நவீனரக அழிவு ஆயுதங்கள் யாழ்ப்பாணத்தில் குவிக்கப்பட்டன. இஸ்ரேலும், ரஷ்யாவும் நவீன ரக வேவு விமானங்களையும் உலங்கு வானூர்திகளையும் அனுப்பிவைத்தன. அவசர அவசரமாக ஆயுதரீதியில் சிங்கள இராணுவ யந்திரம் வலுப்படுத்தப்பட்டது.

அபாயச்சங்கை ஊதி உலகத்தின் உதவியைப்பெற்று இராணுவத்தைப் பலப்படுத்தி யாழ்ப்பாணத்தில் போரைத் தொடரும் சந்திரிகாவின் தந்திரோபாயம் வெற்றிபெற்றது.

## சிங்கள ஆயுதப்படையினரின் ஆக்கிரமிப்பால் 5 லட்சம் மக்கள் வெளியேறினர்.

1995ல் யாழ்ப்பாண நகரில் சிங்கள ஆயுதப் படைகள் ஆக்கிரமித்தபோது அதன் விளைவாக ஐந்துலட்சம் மக்கள் இடம்பெயர்ந்த மாபெரும் மனித அவலம் ஏற்பட்டபோதும் உலகம் கண்களை மூடிக்கொண்டு மௌனம் சாதித்தது. ஆனால் இப்போது சிங்களஇராணுவ ஆக்கிரமிப்புப் படிப்படியாக உடைக்கப்பட்டு மீண்டும் யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளின் ஆட்சிக்குள் வரும் புறநிலைகள் தோன்றியபோது உலகநாடுகள் பதற்றமடைந்து சிங்கள அடக்குமுறை ஆட்சியாளர்களுக்கு உதவிகளைச் செய்வதோடு எமக்கு ஒரு புறத்தில் ஏமாற்றத்தையும் மறுபுறத்தில் கவலையையும் கொடுக்கிறது.

யாழ்ப்பாணம் சிங்கள தேசத்திற்கு உரித்தானது அல்ல. யாழ்ப்பாணம் யாழ் மக்களுக்கே உரித்தானது. இறையாண்மை என்பது ஒரு அரசின் தெய்வீக சொத்து உரிமை அல்ல.

## யாழ்ப்பாணத்தை மீட்டெடுத்தே தீருவோம்

யாழ் இறையாண்மை யாழ் மக்களுக்கே உரித்தானது இராணுவ ஆக்கிரமிப்பு மூலம் தமிழரின் வரலாற்று மண்ணை சிங்களவரின் இறையாண்மையினால் செலுத்தி விட முடியாது தமிழரின் விடுதலைப்படை என்றரீதியில் நாம் எமது மண்ணில் அந்நியர் ஆக்கிரமிப்புக்கு இடம் அளிக்க போவதில்லை எத்தனை சவால்களுக்கு முகம் கொடுத்தாலும், எத்தனை இடையூறுகளை எதிர்கொண்டாலும் எத்தகைய சக்திகள் எதிர்த்துக் கொண்டாலும் எமது விடுதலை இயக்கம் யாழ்ப்பாணத்தை மீட்டு எடுத்தேதீரும்.

## 'லங்கா முடித்த' இன்று புறப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து திருமலைக்கான 'லங்கா முடித்த' பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறுமென றான் இணைப்பாளர் எஸ்.குகராஜன் தெரிவித்துள்ளார்.

இக் கப்பலில்பயணம்செய்ய 800 பேருக்கு பயணப் பாதுகாப்பு அனுமதிவழங்கப்பட்டு நேற்று பயணச் சீட்டு வழங்கப்பட்ட போதிலும் 150 பேருக்கு மாத்திரமே பயணச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது. ஏனையோர் இன்று காலை 6.30 மணிக்கு பயண ஆயத்தங்களுடன் யாழ். புகையிரத நிலையத்திற்கு வருகை தந்து பயணச் சீட்டைப் பெற்று பிரயாணத்தை மேற்கொள்ள முடியுமென்றும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். (இ-12)

## மாவின் விலை 2ரூபா-வால் உயர்வு

(கொழும்பு)

ஒரு கிலோ கோதுமை மாவின் விலை இரண்டு ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது முன்னர் 14 ரூபா 95 சதமாக விற்பனை செய்யப்பட்ட கோதுமைமா தற்போது 16 ரூபா 95 சதமாக விலையுயர்தப்பட்டுள்ளது.

இன் நடைமுறை நேற்று முதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதுடன் மாவின் விலை அதிகரிப்பையடுத்து.

பாணின் விலை உயர்வு பற்றி அரசாங்கம் பரிசீலித்து வருவதாக உணவு ஆணையாளர் டபிள்யூ.டி.குணத்திலக தெரிவித்துள்ளார். (ந-37-5)

## வவு.கல்வி...

வளாகத்தில் இடம்பெற்ற இச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இனந்தெரியாதோரால் இரவோடிரவாக ஏற்றப்பட்டிருந்த இக் கொடியை காலையில் அவதானித்த கல்லூரியிர் பீடாதிபதி உடனடியாக வவுனியாப் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்தார்.

அப்பகுதிக்கு விரைந்த படையினர் காலை 11மணியளவில் புலிக்கொடியை அகற்றியதுடன் விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வவுனியாவின் புறநகர்ப் பகுதிகளில் ''மாவீரர் வாரம் 2000'' என்று எழுதப்பட்ட பதாகைகள் மற்றும் சுவரொட்டிகள் மாவீரர் புகழ்பாடும் வகையிலமைந்த கவிதைகள் என்ப

## மீண்டும் அமைதியற்ற ஆறாண்டுகள்

மீண்டும் ஆறு ஆண்டு காலம் சந்திரிகாவின் ஆட்சி தொடரப்போகிறது. இந்த ஆறு ஆண்டு காலத்தில் தீவில் அமைதி குலையுமா, அல்லது போரின்வன்முறை தலைவிரித்தாடுமா என்பது சந்திரிகா கடைப்பிடிக்கப் போகும் செய்கையிலேயே அமைந்துள்ளது.

இந்த அரசானது தென்னிலங்கை இனவாத சக்திகளின் ஆதரவோடுதான் ஆட்சி பீடம் ஏறியுள்ளது. புலிகளுக்கெதிராக போர் முரசு சொல்லித்தான் தேர்தலைச் சந்தித்துள்ளது. மிகவும் மோசமான தேர்தல் மோசடிகள் வன்முறைகள் வாயிலாகவே வெற்றிகளைப் பெற்றிருக்கிறது.

இனவாதக் கடும் போக்காளர்களே இந்த அரசின் முக்கிய பொறுப்புக்கள் வகிக்கிறார்கள். இவர்களில் பலர் அமைச்சர்களாகவும், பதவியை ஏற்றுள்ளார்கள். ஆயுத

## தொண்டர் ஆசிரியர்களுக்கான கூட்டம்

இடம் : யா / வேரப்பிட்டி மகளிர் கல்லூரி.

காலம் : 30/11/2000 வியாழன் காலை 8-00 மணி

குறிப்பு : சங்கத்தில் பதிவு உள்ளவர்கள் அனைவரும் தங்களது பதிவினை உறுதிப்படுத்திக் கொள்ளவும். பின்னர் பதிவுகள் மேற்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் உரியவர்கள் மட்டும் சமூகம் தரவும்.

நன்றி

தொண்டராசிரியர்சங்கம்
யாழ். மாவட்டம்

(1963)

எந்தகைய சக்திகள் எதிர்த்துக் கொண்டாலும் எமது விடுதலை இயக்கம் யாழ்ப்பாணத்தை மீட்டு எடுத்தேதீரும்.

எல்லாச்சமர்களுக்கும் தாய்ச்சமராக விளங்கிய ஆனையிறவு மற்றும் வடமராட்சி, தென்மராட்சி, யாழ் நகராட்சி சமர்களில் களமாடி சாதனை படைத்த சகல போராளிகளுக்கும் படைநகர்த்திய தளபதிகளுக்கும் எனதுபாராட்டுக்கள்

எமது விடுதலைப் போராட்டத்தில் பரந்துபட்ட பொது மக்கள் இணைந்துகொள்வதன்மூலம்தான் இது மக்கள் போராட்டம் என்ற உயர்நிலை அரசியல் பரிமாணம் பெறுகின்றது, எமது ஆயுதப் போராட்டத்திற்கு மக்களின் பங்களிப்பு மேலும் மேலும் பெருகவேண்டும்.

இதற்கு இந்த அரசாங்கமே தடையாக இருக்கிறது. மிகவும் குழப்பகரமாக பேசுகிறது. புலிகளுடன் பேசத்தயார் என ஒருகுரலும், புலிகளை பூண்டோடு அழிப்போமென இன்னொரு குரலும், புலிகள் சரணடையும் வரை போர் ஓயாதென மற்றொரு குரலுமாக ஜனாதிபதி, பிரதமமந்திரி, இராணுவத்தளபதியாகிய உயர் அதிகார பீடங்களிலிருந்து இத்தகைய முரணான குரல்கள் எழுப்பப் படுகின்றன. இந்த வித்தியாசமான குரல்கள் ஒவ்வொன்றும் வித்தியாசமான பார்வையாளர்களைத் திருப்திப் படுத்தும் நோக்குடனேயே எழுப்பப்படுகின்றன. சந்திரிகாவும் கதிர்காமரும் வெளிநாடுகளுக்கு ஏமாற்று வித்தை காட்ட, பிரதம மந்திரியும், இராணுவத்தளபதியும், உள்நாட்டு இனவாதசக்திகளுக்கு தீனி போட்டு வருகின்றனர்.

சமாதானமென்றும், பேச்சுவார்த்தையென்றும் அதிகாரப் பரவலாக்கல்என்றும், அரசியலமைப்பு என்றும்வார்த்தைப் பிரயோகங்களைக் கையாண்டு மேற்குலகின் கண்களுக்கு மண் தூவி வருகிறார். தமிழ் மக்களையும் விடுதலைப்புலிகளையும் பொறுத்தவரை சந்திரிகா ஒரு சமாதானப் பிரியை அல்ல. இராணுவத் தீர்வில் நம்பிக்கை கொண்டுள்ளார்.

சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கு இசைவானதாகவே தமிழீழப் போர் நடைபெற்று வருகிறது. இந்தப் போரை நடத்துவதற்கு தமிழர்களாகிய எமக்கு சகல உரிமையும் உண்டு என்று தனது மாவீரர்தின உரையின் போது பிரபாகரன் குறிப்பிட்டுள்ளார்.

மாவீரர் புகழ்பாடும் வகையிலமைந்த கவிதைகள் என்பனவும்ஒட்டப்பட்டிருந்ததாமத் தெரிவிக்கப்படுகிறது.

(இ)

## நிபந்தனையற்ற---

அமுல் படுத்த முனையும் போது சகலரையும் ஒரே கொள்கைக்குள் கொண்டு வரமுடியும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் தலைவர் அதனை குறையாக நினைத்தால் அதனை உரிய முறையில் நிவர்த்தி செய்து கொள்ள முடியும்.

நிபந்தனையற்ற வகையில் பேச்சுவார்த்தை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாக முன்னேற்றங்கள், புரிந்துணர்வுகள் ஏற்படும் போது யுத்த நிறுத்தத்தை செயல் படுத்த முடியும் என்று நான் நினைக்கின்றேன் என்றார்.

## கொழும்பிலும்...

தமிழர்களும் வானொலி மூலம் கேட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றைய தினம் புலிகளின் குரலை கொழும்பிலுள்ள தமிழ் மக்கள் ஆர்வத்துடன் கேட்டுள்ளனர். (ந)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும்விலாசத்தில் அமைந்துள் அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.